# اِخلاص کی برکت

# மனதூய்மையின் பரகத்துகள்

உர்தூவில்

حضرت پیر ذوالفقار احمد صاحب نقشبندی
دامت برکاتھم



اخلاص کی برکات

# மனத்தூய்மையின் பரகத்துகள்

## உருதுவில்

**ஹள்ரத் ஷைக் பீர் துல்ஃபிகார் அஹ்மத் ஸாஹிப்**

நக்ஷபந்தி தாமத் பரகாதுஹு

## மேற்பார்வை

**மௌலானா ஷகீல் அஹ்மத்**

நக்ஷபந்தி தாமத் பரகாதுஹு

(பேராசிரியர் அல் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்)

செல் : 94444 53232

## தமிழில்

**மௌலானா அபுல் ஹஸன் ஹஸனி புளியங்குடி**

## மதிப்புரை

அல்லாஹ்வின் கிருபையால் சர்வதேச அளவில் மாபெரும் திருத்த பணி செய்து வரும் பெரியார்களில் ஹள்ரத் மௌலானா பீர் துல்ஃபிகார் அஹ்மத் ஸாஹிப் நக்ஷபந்தி முஜத்திதீ தாமத் பரகாத்துஹுமும் அவர்கள் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டியவர்கள்.

பாவத்தின் காரணத்தால் துன்பத்தில் துவண்ட மனிதர்கள் ஹள்ரத் அவர்களின் சொற்பொழிவால் தனக்குள் திருத்தத்தை ஏற்படுத்தி, இன்பமான, தூய்மையான வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் ஏராளம். பொதுமக்கள் மட்டுமின்றி உலமாக்கள் மற்றும் ஸாலிஹீன்கள் என அனைத்து தரப்பினரும் ஹள்ரத் அவர்கள் மூலம் பயன் அடைந்து வருகின்றனர்.

இக்லாஸ் உலத்தூய்மை என்பது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாகும். இறைப்பாட்டையில் பயணிக்கும் ஒவ்வொருவருக்கும் இறுதியாக வருவது இக்லாஸ்தான். இக்லாஸ் உள்ளவர்கள் தான் இவ்வுலகத்தின் ஒளிவிளக்குகளாகும்.

நம்முடைய பெரிய பெரிய நல் அமல்கள் எல்லாம் இக்லாஸ் இல்லாவிட்டால் நாளை மறுமையில் ஒன்றுமற்றதாக ஆகிவிடும். எனவே இந்த இக்லாஸ் என்பது நம்முடைய ஒவ்வொரு செயலிலும் இருப்பது அவசியமாகும்.

எனவே இக்லாஸைப் பற்றி வரலாற்று நிகழ்வுகளோடு ஹள்ரத் அவர்கள் நிகழ்த்திய உருது பயானின் தமிழாக்கம் தான் இந்நூலாகும். இதை மௌலானா அபுல் ஹஸன் ஹஸனி புளியங்குடி அவர்கள் மொழி பெயர்த்துள்ளார்கள். அல்லாஹ் நம்மவர்களுக்கு இக்லாஸ் எனும் பாக்கியத்தை தந்தருள்வானாக!

ஆமீன்...

- மௌலான ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி
மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் துணை முதல்வர்
போன் - 9444453232

# اقتباس மூலக் கரு

அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதிலே மனிதனுடைய எண்ணம் மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. எனவே தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## انما الاعمال بالنيات

"அமல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே அமைந்துள்ளது".

எண்ணத்தை மாற்றுவதின் மூலம் மனிதனுடைய அமலின் எதார்த்த நிலை மாறி விடுகின்றது இதனால் தான் நாம் நம்முடைய எண்ணங்களை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்! அதன் மீது சிந்தனை வைத்துக் கொண்டே இருக்க வேண்டும்! அதனை சரி செய்து கொண்டே இருக்க வேண்டும்! ஏனென்றால் எண்ணம் சீராகுவதன் மூலம் சிறிய சிறிய அமல்களுக்கும் மிகப்பெரும் கூலி கிடைக்கின்றது. மேலும் எண்ணத்தில் மாற்றம் ஏற்படுவதின் மூலம் மலைகள் போன்ற அமல்களுக்கும் கூட சிறிதும் நன்மை கிடைக்காமல் போய் விடுகின்றது.

ஹள்ரத் மௌலானா துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷபந்தி

الحمد لله وكفى وسلام على عباده الذين اصطفى اما بعد
فاعوذ بالله من الشيطان الرجيم  بسم الله الرحمن الرحيم
وما أمروا الا ليعبدوا الله مخلصين له الدين
سبحن ربك رب العزة عما يصفون  وسلام على المرسلين
والحمد لله رب العالمين

اللهم صل على سيدنا محمد
وعلى ال سيدنا محمد وبارك وسلم

## மார்க்கத்தின் மூன்று படித்தரங்கள்

மனிதன் எதனை தேர்வு செய்து அல்லாஹ்வின் நெருக்கமான அடியானாக ஆகுவானோ அப்படிப்பட்ட மூன்று படித்தரங்கள் மார்க்கத்தில் உள்ளன:

## முதல் படித்தரம்

### கல்வி கற்பது:

கல்வி என்பது ஒளி ஆகும். அதன் மூலம் மனிதன் தன் வாழ்க்கையை வாழ்வதற்குரிய வழியை அடைகின்றான் கல்வி இல்லை என்றால் மனிதன் எவ்வாறு அமல் செய்ய முடியும்? எனவே கல்வி ஒரு அடிப்படையாகும்.

நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்:- (கல்வியினை அடைவது ஒவ்வொரு முஸ்லிமான ஆண், பெண்ணின் மீதும் கடமை ஆகும்).

# طلب العلم فريضة على كل مسلم

கல்வியை அடைவது ஒவ்வொரு முஸ்லிம்கள் மீதும் கடமை ஆகும்.

இதனுடைய விளக்கம் என்னவென்றால்:- தீனின் அடிப்படையான கல்வியை அடைவது ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும். ஆனால் அதனின் விளக்கமான கல்வியை சிலராவது فرض كفاية கற்றிருப்பது அவசியமாகும். தீனின் விளக்கமான கல்வியை பெற்றிருக்கும் ஒரு கூட்டம் ஒவ்வொரு காலமும் இருக்க வேண்டும். நம்மைப் போன்ற பொது மனிதர்கள் தீனின் அடிப்படைகளை அறிவது அவசியம்.

நினைவில் வையுங்கள்:

பர்ளான செயல்களின் கல்வியை கற்பது فرض ஆகும் வாஜிபின் கல்வியை கற்பது واجب ஆகும். இன்னும் சுன்னத்துகளின் கல்வியை கற்பது சுன்னத் ஆகும்.

## இரண்டாம் படித்தரம்

அறிந்ததின் படி அமல் செய்வது: இல்மை கற்பதின் மூலம் மட்டும் வேலை ஆகாது.

ஒருக்கால் இல்மின் மூலம் அல்லாஹ்வின் மன்னிப்பு கிடைக்கும் என்றிருந்தால் ஷைத்தானுக்கு மன்னிப்பு கிடைத்திருக்கும். அவனிடமோ கல்வி ஞானங்கள் அதிகமாக இருந்தது. என்றாலும் அமலின் விஷயத்திலே குறைவு செய்து விட்டான். எந்த மனிதன் தன் இல்மின்படி அமல் செய்வானோ அவனுக்கு علم لدنی யை

வழங்குகின்றான். (இல்மே லதுன்னி என்றால் எந்த நூற்களையும் பார்க்காமலே இறைவன் தன்புறத்தில் இருந்து வழங்கும் இல்மாகும்.)

من عمل بما علم ورثه الله بما لم يعلم

யார் தான் கற்றதின் படி அமல் வெய்வாரோ அல்லாஹுதஆலா அவனுக்கு அவன் அறியாத புறத்தில் இருந்து கல்வியை தருகின்றான்.

பொதுவாக ஷைத்தான் மாணவர்களின் மனதில் நீ இப்பொழுது கல்வியை அடைந்து கொள்! பின்பு ஒன்றாக சேர்த்து அமல் செய்து கொள்! என்ற விஷயத்தை போடுகின்றான் யார் இது போன்று நினைப்பாரோ அவர் ஷைத்தானின் வலையில் வீழ்ந்து விட்டார்.

***கற்ற இல்மின்படி அமல் செய்வதற்குரிய வழிமுறை***

ஒருபுறம் இல்மைக் கற்று கொண்டே மறுபுறம் அதன் படி அமல் செய்துக் கொண்டே இருக்க வேண்டும். இது மட்டுமே அதற்கான வழி! இதுவே ஸஹாபாக்களின் பண்பாக இருந்தது. ஹள்ரத் அபூபக்கர் (ரலி) கூறியிருக்கிறார்கள் நான் இரண்டு ஆண்டுகளாக சூரா பகராவை கற்றுக் கொண்டேன். சூரா பகரா நிறைவுற்றபோது என்னுடைய அமலும் சூரா பகராவுக்கு தோதுவாக பரிபூரணமாக நடைபெற்று கொண்டிருந்தது.

## மூன்றாம் படித்தரம்

**மனத்தூய்மை:** எந்த அமல் செய்தாலும் அல்லாஹ்வின் பொருத்தமே நோக்கமாக இருக்க வேண்டும் இது அனைத்தையும் விட சிரமமான விஷயமாகும்.

எனவே இந்த விழாவில் மனத்தூய்மையைப் பற்றி பேச என் மனம் நாடுகின்றது. மனிதன், இந்த தடத்திலே அடியெடுத்து வைத்து அதனை அடைய முயற்சி செய்யும் போதுதான் இது எவ்வளவு கடினம் என்பதை அறிந்துகொள்வான். அமல் செய்வது இலகுவானது என்றாலும் அல்லாஹ் பிரியப்படும் அளவு அமல் செய்வதென்பது மிகவும் கடினமானதாகும்.

எனவே தான் நல்லடியார்கள் அமல்கள் செய்து கொண்டே இருப்பர். (அவைகள் ஏற்றுக்கொள்ளப்படுமா? இல்லையா? என்று) பயந்து கொண்டும் இருப்பர் அவர்கள் தம்முடைய முழு வாழ்க்கையிலும் தஹஜ்ஜதை பேணுதலாக தொழுது கூட அவர்கள்

ماعبدناك حق عبادتك وما عرفناك حق معرفتك

“உன்னை எப்படி வணங்க வேண்டுமோ, நாங்கள் அப்படி வணங்கவில்லை

எப்படி அறிந்து கொள்ள வேண்டுமோ அப்படி அறிந்து கொள்ளவில்லை” என்று கூறுபவர்களாக இருந்தனர்.

அவர்கள் முழு இரவையும் தஹஜ்ஜத் தொழுகையிலே கழித்துவிட்டு சுபுஹின் நேரத்திலே அவர்கள் முழு இரவும் ஒரு பெரும் பாவம் செய்த குற்றவாளியை போன்று. அந்த அமலின் மீது கைசேதப்பட்டு பாவ மன்னிப்பு கோருகிறார்கள்.

كانوا قليلا من الليل ما يهجعون وبا الاسحارهم يستغفرون

(இரவில் மிகக் குறைவாகவே தூங்குகிறார்கள். இன்னும் ஸஹர் நேரங்களில் பாவ மன்னிப்பு கோருகிறார்கள்)

அவர்கள் மிகவும் இருண்ட இரவில் அல்லாஹ்வின் பயத்தில் தன்னுடைய நெற்றியை பணியச் செய்து வணக்கம் புரிகின்றனர். பிறகு அதிகாலை நேரத்தில் நாம் எவ்வாறு அமல் செய்திருக்க வேண்டுமோ அவ்வாறு அமல் செய்ய வில்லையே என்று துயரம் கொள்கிறார்கள். சில கிதாப்களிலே நல்லடியார்களின் நிலைகளை எழுதுகிறார்கள்: 'அந்த நல்லடியார்கள் அதிகாலை எழுந்து தம் முகங்கள் உருமாற்றப்பட்டிருக்குமோ எனும் அச்சத்தில் தம் முகங்களை தடவி பார்த்துக் கொள்வர். ஆனால் நாமோ எந்த அளவு நம்முடைய பெரியார்கள் அவர்களின் நல்ல அமல்களின் மீது அவை மறுக்கப்பட்டு விடுமோ என அல்லாஹ்வை பயந்து கொண்டிருந்தார்களோ அந்தளவு நம்முடைய பாவத்தின் மீது கூட நாம் பயப்படுவதில்லை)

## அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில் நிய்யத்தின் பங்கு

அமல்கள் எற்றுக் கொள்ளப்படுவதிலே மனிதனுடைய நிய்யத்திற்கு பெரும் பங்கு இருக்கின்றது எனவே தான், நபி (ஸல்) அவர்கள் அருளியிருக்கின்றார்கள்:-

انما الاعمال بالنيات

(அமல்கள் அனைத்தும் எண்ணங்களை பொருத்தே உள்ளது)

எண்ணத்தை மாற்றுவதின் மூலம் மனிதனுடைய அமலின் எதார்த்த நிலை மாறிவிடுகின்றது இதனால் நாம் நமது எண்ணங்களை பார்த்துக் கொண்டே இருப்பதும் அதனைப் பற்றி சிந்தித்துக் கொண்டே இருப்பதும் அதனை சரி செய்து

கொண்டே இருப்பதும் அவசியமாகும் ஏனென்றால் எண்ணத்தை சரி செய்வதின் மூலம் சிறு சிறு அமல்களைக் கொண்டு மிகப் பெரும் நன்மை கிடைக்கக் கூடும். ஆனால் எண்ணத்திலே மாற்றம் ஏற்படுவதின் மூலம் மலையைப் போன்ற அமல்களுக்கு கூட சிறிதும் நன்மை கிடைக்க வாய்ப்பு இல்லை எனவே எண்ணத்தை சரி செய்வது மிகவும் அவசியம்.

## சில உதாரணங்களை செவிதாழ்த்தி கேட்டுக் கொள்ளுங்கள்!

ஷைகுல் ஹதீஸ் மௌலானா ஜகரிய்யா (ரஹ்) அவர்கள் ஒரு சம்பவத்தை எழுதுகிறார்கள். ஒரு பெரியார் ஜமுனா நதிக்கரையில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களிடம் ஒரு மனிதர் வந்து பெரியாரே! நதியின் மறு கரையில் எனக்கு ஒரு வேலை உள்ளது. ஆனால் நதியில் வெள்ளப்பெருக்கு அதிகமாக உள்ளது. அதனால் படகின் மூலம் செல்வது கடினமாகும். இப்பொழுது நான் என்ன செய்வது? என்று கேட்க அப்பெரியார் கூறினார் 'தன் மனைவியுடன் எப்பொழுதுமே உறவே கொள்ளாத எப்பொழுதும் உணவே உண்ணாத அப்படிப்பட்ட ஒரு மனிதரிடம் இருந்து தூது உள்ளது. எனவே நீ எனக்கு வழிவிடு' என்று கூறச் சொன்னார் இப்பொழுது அந்த அடியான் சென்று அந்த செய்தியை நதியிடம் கூறினார். நதி தன் சீற்றத்தை குறைத்துக் கொண்டது. அந்த மனிதன் நிம்மதியாக கரையைக் கடந்து அக்கரைக்குச் சென்றார்.

அப்பெரியாரின் மனைவி தன் கணவரின் இப்பேச்சை கேட்டுக் கொண்டிருந்தார்கள்! மாஷா அல்லாஹ் அவர்களுக்கோ ஏழு குழந்தைகள் இருந்தனர். அப்பெரியாரின் மனைவி தன்னை

இவ்வாறு கேவலப்படுத்துவதை கேட்டு துடித்து போய் இருந்தார்கள். அப்பெரியார் தன் வீட்டில் நுழைந்த போது அப்பெரியாரின் மனைவி கடும் கோபத்தில் அமர்ந்து இருந்தார்கள். அப்பெரியாரை பார்த்து கேட்டார்கள் சாப்பிட்டு சாப்பிட்டு குண்டாக இருக்கின்றீர். ஆனால் சாப்பிடவில்லை என கூறுகின்றீர் சரி அதாவது நீங்களும் உங்கள் இறைவனாச்சு! ஆனால் என்னோடு ஒரு போதும் உறவு கொள்ள வில்லை என்று கூறினீர்களே அவ்வாறாயின் எவ்வாறு இந்த ஏழு குழந்தைகளும் வந்தனர் என மனைவி கோபாவேசத்துடன் வினவினார்கள்.

அதற்கு அப்பெரியார் மனைவிக்கு தெளிவான விளக்கத்துடன் புரிய வைத்தார்கள். பார்! நான் எப்பொழுதெல்லாம் சாப்பிடுவேனோ, அப்பொழுதெல்லாம் அல்லாஹ்வும் அவனின் பிரியமான தூதரும் 'ஆத்மாவின் கடமை உங்கள் மீது இருக்கின்றது' என்று கூறியுள்ளார்கள் இதனால் தான் நான் என் ஆத்மாவின் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் உட்கொண்டேன் ஒருபோதும் என் இச்சைக்காக சுவைக்காக சாப்பிடவில்லை இதே போன்று தான் நான் ஏழு பிள்ளைகளுக்கு தந்தையாக உள்ளேன் நான் மனைவியாகிய உன்னுடன் உறவு கொள்ளும் போதெல்லாம் 'மார்க்கம் என் மீது மனைவியின் கடமைகளை நிறை வேற்றும்படி பணித்திருக்கின்றது எனவே நான் என் மனைவியின் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றேன் என்ற எண்ணமே இருக்கும். என் நோக்கம் மனோ ஆசைகளை தனிப்பது, ஆசைகளை நிறைவேற்றுவது என்றிருக்காது. எனவே அவை அனைத்தையும் செய்தேன். எனினும் அவை நான் செய்யாதது போல் தான் என்றார்கள்.

நாம் பெரும் பெரும் உலமாக்களை பார்த்திருக்கின்றோம் அவர்களின் (தோழமையில்) சமூகத்தில் ஒன்று இரண்டு மணி நேரம் அமர்ந்திருந்தாலும் அவர்களும் அமைதியாகவே இருப்பார்கள். இமாமுல் அஃளம் அவர்களின் வாழ்க்கையின் வரலாற்றிலும் எழுதியிருக்கிறார்கள் அன்னவர்கள் இயல்பாகவே குறைவாக பேசுபவர்களாக இருந்தார்கள். என்றாலும் (யாரேனும் பேச்செடுத்தால்) தீனுடைய விஷயத்தில் அவர்களை சீண்டினால் அபபொழுது ஆதாரங்களின் குவியலை அவருக்கு முன் குவித்து விடுவார்கள். (அதாவது மார்க்கத்திற்காகவே பேசுவார்கள்.)

செய்யது ஸவ்வார் ஹுஸைன் ஷாஹ் (ரஹ்) அவர்களிடத்திலும் இதே விஷயம் (தேவையேற்பட்டால் மட்டுமே பேசுவார்கள்.) அவர்கள் மிகப் பெரும் ஆலிமாகவும் இன்னும் மார்க்க ஞானியாகவும் இருந்தார்கள். அவர்களின் உம்ததுல் ஃபிக்ஹ் என்ற கிதாப் இன்று பெரும் பெரும் மார்க்க தீர்ப்பாளர்களின் மேஜையை அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றது.

அவர்களின் ஒரு ஆச்சரியமான வழமை என்னவென்றால் அவர்களிடத்தில் யாரேனும் ஒரு நபர் சென்று அமர்ந்து அமைதியாக இருந்தால் ஹள்ரத் அவர்களும் அமைதியாகவே இருப்பார்கள் எதுவரையென்றால் ஒன்று, இரண்டு மணிநேரம் இவ்வாறே கழியும். ஹள்ரத் அவர்கள் பேசவே மாட்டர்கள். இவ்வளவு கல்வி ஞானம் இருந்தும் மனிதன் பேசாமல் இருப்பது மிக திகைப்பூட்டும் விஷயமே! எனினும் யாராவது கேள்வி கேட்டால் அவற்றையெல்லாம் இப்பொழுதுதான் முழுமையாக பார்த்து வந்தது போன்று மிக தெளிவாக விரிவாக பதிலளிப்பார்கள். ஒருசமயம் மாணவர்களின்

ஒரு குழு ஹள்ரத் அவர்களின் சமுகத்தில் ஆஜராகி "அதானே ஜவ்க்" பற்றி வினவினர் - முந்தைய காலங்களில் ஸ்பீகர் இல்லாததால், மக்கள் அதிகமாக இருந்ததால் பெரிய மஸ்ஜித்களில் பலர் சேர்ந்து அதான் சொல்வர். இதற்கு அதானே ஜவ்க் எனப்படும். இக்காலங்களில் இந்த மஸ்அலாவின் தேவை ஏற்படுவதில்லை. ஆக ஹள்ரத் அவர்கள் இதே மஸ்அலாவின் விளக்கங்களை கூற ஆரம்பித்தார்கள். முழு $1^1/_2$ மணிநேரம் இந்த ஒரு மஸ்அலாவின் விளக்கங்களை தெளிவுபடுத்தினார்கள்.

சிறுது சீண்டி விடுங்கள்! பிறகு என்ன வாகும் என்று பாருங்கள்.

நாம் இந்த பண்பை அவர்களுடைய தொடர்பின் மூலம் பெற்றுக் கொள்கிறோம் அதாவது அல்லாஹ்வை சார்ந்தவர்களுடைய பேச்சு பேச்சல்ல மாறாக பதில் கொடுப்பதாகும். அவர்கள் தாங்களாக பேசமாட்டர்கள் பெரும்பாலும் அமைதியாகவே இருப்பார்கள் ஏனென்றால் தானாக முன் வந்து பேசினால் ஏன் பேசினீர் என்று கேட்கப் படுவதை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால் யாராவது ஏதேனும் ஒன்றை கேட்டு விட்டால் அப்போது அவர்கள் பதில் அளிப்பதின் பால் பணிக்கப்பட்டவர்களாக ஆகிவிடுவார்கள். மார்க்கம் கேள்விகேட்பவருக்கு பதில் அளிக்கும் படி பணிக்கிறது. அந்த அடிப்படையில் பதிலளித்தால் அதன் மீது பிடிக்கப்படாது. மாறாக கூலி வழுங்கப்படும்.

நம்முடைய நிலை என்னவென்றால் ஓரிரு வார்த்தைகள் கூட நன்கு தெரியாது. ஆயினும் வளவளவென பேசிக் கொண்டே இருக்கின்றோம். நாவுகள் களைப்படைவதில்லை.

இவை அனைத்தும் நாம் நம் செயலேட்டைப் பற்றி அதாவது அதற்கு எவ்வாறு பதில் அளிப்பது? என்ற கவலையே இல்லாமல் இருக்கின்றோம் என்பதின் மீது அறிவிக்கிறது. இரு நபர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது நபர் அதனை கேட்டுக் கொண்டிருப்பவர். அவர்களுக்கு தீர்ப்பு வழங்க ஆரம்பித்து விடுகிறார். சகோதரரே நீங்கள் எப்போது முஃப்தியாக ஆனீர்? எப்பொழுது தங்களிடம் ஒரு விஷயத்தை வினவப்படவில்லையோ பின்பு இடையில் வந்து சம்பந்தப்படுவதற்கு என்ன அவசியம் உண்டு? இந்த விஷயத்தின் மூலமாக அவருக்கு தமது செயல்களின் ஏட்டை பற்றிய கவலை இல்லை என்பதை விளங்கிக் கொள்ளலாம். ஒரு சமயம் கவலை இருந்திருந்தால் இடையில் பதில் அளிப்பது அவருக்கு சிரமமாக (பிடிக்க காரணமானதாக) தெரிந்திருக்கும்.

ஹள்ரத் ஹாஜி இம்தாதுல்லாஹ் முஹாஜிர் மக்கி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். எப்பொழுதாவது யாராவது ஒருவர் என்னிடம் பைஅத் வாங்க வந்தால் ஒருவர் சிங்கத்தைக் கண்டு அஞ்சுவது போன்ற அச்சம் எனக்கு ஏற்படுகின்றது. ஒருவர் ஏன்? என்று கேட்டார். இவர் பைஅத் என்னும் துறையில் நுழைவதால் இன்று முதல் அவர்களுடைய செயல்களைப் பற்றி என்னிடம் கேட்கப்படும் என்று கூறினார்கள். இருப்பினும் ஹள்ரத் அவர்கள் அனைவருக்கும் பைஅத் செய்து கொடுக்கிறார்கள். ஹள்ரத்! முன்பு வாழ்ந்த பெரியார்கள் பெரும் இஸ்திகாராவுக்கு பின்பும் ஆழ்ந்து சிந்தித்த பின்பும் பல மாதங்கள் காத்திருந்த பின்புதான் பைஅத் செய்வார்கள். ஆனால் தங்களிடம் யார் வந்தாலும் சரி, எந்நிலையில் வந்தாலும் அவருடன் பைஅத் செய்து விடுகிறீர்களே? என்று ஒருவர்

வினவினார். அதற்கு ஹள்ரத் அவர்கள் மிகவும் ஆச்சரியமான பதில் அளித்தார்கள். சகோதரரே! யார் வந்து பைஅத் உடைய ஆசையை வெளிப் படுத்துவாரோ அவரை நான் முஃமினான சகோதரர் என்று கருதி அவரின் காரியத்தை நிறைவேற்றி வைக்கிறேன். அச்சமயம் என் சிந்தனையில் நாளை கியாமத் நாளில் அல்லாஹ்வுடைய தர்பாரில் நான் பிடிக்கப்பட்டால் அவர்களில் (செய்தவர்களில்) இருந்து யாரேனும் எனக்கும் பரிந்துரை செய்யக்கூடியவர் இருப்பார் என்று கருதுவேன்.

இந்த உதாரணங்களின் மூலமாக மனத் தூய்மையுடன் அமல்களை செய்வது மிகவும் அவசியம். மேலும் இக்லாஸ் இல்லாமல் அமல்கள் செய்ய வாய்ப்பேதும் இல்லை என்று நமக்கு தெரிய வருகிறது.

## உம்மூல் வளாயிஃப் அமல்களில் சிறந்தது முகஸ்துதியில் இருந்து தவிர்ந்து இருப்பது

மனிதன் நல்லடியார்களுடன் சகவாசம் வைக்க வில்லையென்றால் அவனுக்குள் முகஸ்துதி வந்து விடுகிறது. முகஸ்துதி என்றால் எதற்கு சொல்லப்படும்? முகஸ்துதி என்பது ஒரு அடியார் அமல் செய்கிறார். ஆனால் அவர் மக்கள் என்னை நல்லவர் என்று கூற வேண்டும் என்று கருதுகிறார். அவர் பல வழிகளின் மூலமாக நான் இன்ன செயலை செய்தேன் என்று மக்களுக்கு மத்தியில் பிரபல்யப்படுத்த நாடுகின்றார். மக்கள் ஒருவரிடம் வந்து தங்களுடைய பேச்சு மிகவும் ஆழகாக உள்ளது

என்றோ அல்லது தங்களுக்கு மாணவர்கள் அதிகமாக உள்ளார்கள் என்றோ யாரேனும் கூறினால் அவருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. சில தருணங்களில் சில மனிதர்கள் பேசும் சமயம் நான் ஐந்தாவது ஹஜ் செய்யும் சமயம் இன்ன நிகழ்வு நிகழ்ந்தது என்று கூறுவார்கள். யாரேனும் ஒருவர் "நிகழ்வை தான் கூறவேண்டும்!. இந்த ஐந்து என்ற வார்த்தை சொல்ல என்ன அவசியம் இருந்தது? என்று கேட்கலாம். ஆனால் 'மனோ இச்சை' நான் ஐந்து ஹஜ் செய்துள்ளேன் என்று கூறினால் மக்கள் இவரும் மதிப்பிற்குரியவர் என விளங்குவார்கள் என்பதற்காக.

ஆக படைப்பினங்களிடம் புகழை எதிர்பார்ப்பதும் அவர்களுடைய புகழை கண்டு மகிழ்வு அடைவதும் முகஸ்துதியாகும். முகஸ்துதியை விட்டு தவிர்ந்து இருப்பது மிகவும் சிரமமான விஷயமாகும்.

அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு மனிதர் கஃபாவுடைய திரையை பிடித்து பிரார்த்தித்துக் கொண்டும் இருப்பார். அதே சமயம் தன்னுடைய செயல்களை கூஃபாவாசிகளுக்கு காட்டிக் கொண்டும் இருப்பார். மக்கள் வினவினார்கள். அவரோ கஃபாவின் திரையை பிடித்து பிரார்த்தித்துக் கொண்டு இருக்கிறார். பின்பு எவ்வாறு தன்னுடைய அமல்களை கூஃபாவாசிகளுக்கு காண்பிக்கின்றார். ஹள்ரத் அவர்கள் கூறினார்கள். துஆ கேட்கும் சமயம் அவர் தன் உள்ளத்தில் என் ஊர் மக்கள் கஃபாவுடைய திரையை பிடித்து எப்படி ஒர்மையாக துஆ கேட்கிறார் என்று என்னை பார்க்க வேண்டும் என்று கருதுகிறார். இதில் இருந்து அவர் இச்செயலை

அல்லாஹ்விற்காக செய்யவில்லை மாறாக அவர் தன்னுடைய ஊர் மக்களுக்கு காண்பிக்க வேண்டும் என்று செய்கிறார்.

எனவே நம்முடைய அமல்கள் முகஸ்துதியை விட்டும் நீங்கி இருக்க வேண்டும். அது உம்முல் வளாயிஃப் அமல்களிலே சிறந்த அமல் ஆகும்.

ஒரு பெரியார் கூறினார்: ஒரு அடியான் தன் அமல்களை முகஸ்துதிக்காக செய்தால் அல்லாஹ் தன்னிடம் உள்ள மலக்குமார்களிடம் "இன்ன அடியானை பாருங்கள். அவன் நம்முடன் கேலி செய்து கொண்டிருக்கிறான்" என்று கூறுவான்.

நம்முடைய முன்னோர்களின் நிலை என்னவென்றால் அவர்கள் அனுதினமும் நோன்பு நோற்பார்கள். வெளியே செல்ல நேரிட்டால் தங்களுடைய கரத்தையும் இன்னும் வாயையும் கழுகி விட்டு உதடுகளில் நெய் தேய்த்துக் கொள்வார்கள். பார்ப்பவர்கள் வாய் வாசனையின் காரணமாக இவர் நோன்பு நோற்றுள்ளார் என்று தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக இவ்வாறு நெய் தேய்ப்பார்கள்.

உமர் (ரலி) அவர்கள் யாரேனும் வெளிப்படையாக கூனி குறுகிய வண்ணம் நிற்பதை பார்த்தால் அவரை சாட்டையால் ஒரு அடி அடித்து இந்த செயல் தனிமையில் இருக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

எந்த மக்கள் தன் உள்ளத்தில் இருந்து முகஸ்துதியை விட்டும் தவிர்ந்து இருப்பார்களோ இன்னும் தன் உள்ளத்தில் மனத்தூய்மையை எடுத்துக் கொள்வார்களோ அவர்களின்

இயற்கை சுபாவத்திலே பணிவு கலந்த இயலாமை உண்டாகி விடுகிறது. இன்னும் தன்னுடைய அமல்களின் மீது கவனிப்போடு இருப்பார்கள். அதுவே மனத்தூய்மையான அடியார்களின் அடையாளமாக உள்ளது.

## ஹள்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் மனத்தூய்மை

உமர் (ரலி) அவர்கள் யர்மூக் யுத்தம் சமயத்தில் ஹள்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினார்கள். அதில் இன்று முதல் (கடிதம் கிடைத்த தினத்தில் இருந்து) தாங்கள் இருந்த படை தளபதி என்ற பொறுப்பில் இருந்து நீங்கிவிட வேண்டும். இன்னும் கடிதத்தை கொண்டு வருபவர் அந்த தளபதியின் பதவிக்கு வந்து விடுவார். தாங்கள் என்னிடம் திரும்பி வர நாடினால் மதீனா வாருங்கள் (அல்லது) படைவீரராக இருந்து போர் செய்ய விரும்பினால் தாங்கள் போர் செய்ய அனுமதி உண்டு என்பதாக கடிதத்தில் எழுதியிருந்தார்கள். கடிதம் கிடைத்த பின்பு ஹள்ரத் காலித் பின் வலீத் அவர்கள் திரும்பி மதீனா செல்லவில்லை மாறாக ஒரு படைவீரராக இருந்து போர் செய்ய ஏற்றுக் கொண்டார்கள். பிற்காலத்தில் ஒருவர் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் ஆரம்பத்தில் தாங்கள் படை தளபதியாக Cheif Commondar ஆக இருந்தீர்கள். ஆனால் ஒரு கடிதத்தின் காரணமாக ஒரு படைவீரராக போரிட நேரிட்டது. தங்களுக்கு இந்த விஷயம் மிகவும் சிரமமாக இருந்திருக்குமே என்று வினவினார். காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனக்கு எந்த சிரமமும் இல்லை. ஏனெனில் நான் படை தளபதியாக இருந்த சமயமும் அந்த இறைவனையே

பொருந்திக் கொள்ள வைக்க விரும்பினேன். இன்னும் ஒரு படைவீரராக போரிடும் சமயமும் அந்த இறைவனையே பொருந்திக் கொள்ள வைத்துக் கொண்டே இருந்தேன் என்று கூறினார்.

## மௌலானா ஹுஸைன் அஹ்மத் மதனீ (ரஹ்) அவர்களின் மனத் தூய்மை

ஹள்ரத் லாஹூரி (ரஹ்) அவர்கள் ஒரு நிகழ்வை கூறுகிறார்கள். ஹள்ரத் மதனீ (ரஹ்) அவர்கள் ஹஜ பயணம் முடித்து திரும்பும் போது இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அவருக்கு அருகில் ஒரு நாகரீகமுள்ள மாற்றுமதத்தவர் அமர்ந்திருந்தார். பயணத்தின் போது அந்த மாற்று மதத்தவருக்கு கழிவறை செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. அவர் சென்ற போது கழிவறை மிகவும் அசுத்தமாக இருப்பதை கண்டார். உடனடியாக திரும்பி வந்துவிட்டார். அந்த மாற்று மதத்தவரிடம் ஒருவர் தாங்கள் சென்றவுடனே திரும்பி விட்டீர்களே என்று வினவினார். மக்கள் கழிவறையை பயன்படுத்தி விட்டு அதை சரிவர சுத்தம் செய்வதும் இல்லை. எனக்கோ சுயதேவை உள்ளது தான். ஆனால் நான் பயன்படுத்த முடியாத அளவு கழிவறை அசுத்தமாக உள்ளது என்று கூறிவிட்டு அவர் அமர்ந்து விட்டார். சிறிது தருணம் கழித்து ஷைகுல் ஹதீஸ் மதனீ (ரஹ்) அவர்கள் எழுந்து ரயிலில் உள்ள கழிவறைக்குச் சென்று அதனை முழுவதுமாக சுத்தம் செய்தார்கள். சுத்தம் செய்து முடித்த பின்பு திரும்பி வந்து அமர்ந்து விட்டு அந்த மாற்று மதத்தவர் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவரிடம் நான் கழிவறையை பயன்படுத்தும் பொழுது அது சுத்தமாக இருந்ததே என கூறினார்கள். அந்த மாற்று மதத்தவர் மறுமுறை சென்ற

பொழுது கழிவறை சுத்தமாக இருந்தது. அவர் அதனை பயன்படுத்தி விட்டு திரும்பி வந்து நிச்சயமாக யாரோ ஒருவர் அதனை சுத்தம் செய்து விட்டார் என்று கூறினார்.

மக்களிடம் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. இதனை யார் சுத்தம் செய்து இருப்பார் என்பதாக. அப்போது அங்கு இன்னொரு ஆலிமும் அமர்ந்திருந்தார். அவர் பெயர் காஜா நிஜாமுத்தீன் என்பதாகும். அவர் மதனீ (ரஹ்) அவர்களைப் பற்றி சில விஷயங்களை மட்டும் தெரிந்து வைத்து அவர்களை எதிர்த்துக் கொண்டு இருந்தார். ஆனால் அவர்களை பார்க்கவில்லை. இப்பொழுது அவர் மதனீ (ரஹ்) அவர்கள் தான் சுத்தம் செய்தார்கள் என்ற விஷயத்தை அறிந்த போது அவர் அனைவருக்கும் முன்பாக தன் கைகளை ஒன்று சேர்த்துக் கொண்டு கூறினார்கள். “தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். நான் என் வாழ்நாள் முழுவதும் உங்களைப் பற்றி புறம் பேசிக் கொண்டிருந்தேன். உங்களின் மகத்துவம் எனக்கு தெரியவில்லை. ஆனால் இன்று இவைகளை நேரில் கண்டு கொண்டேன். நீங்கள் எந்தளவு மகத்தான நபராக இருக்கிறீர்கள்!!! ஒரு மாற்று மதத்தவருக்காக இப்படிப்பட்ட செயலை செய்துள்ளீர்கள். உடனே மதனீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள். நான் எனது நேசர் (ஸல்) அவர்களின் செயலை தான் செய்தேன் என்றார்கள். மக்கள் அனைவரும் கேட்கலானார்கள். அது எவ்வாறு? அதற்கு ஹள்ரத் அவர்கள் ஒருமுறை நபி (ஸல்) அவர்களிடம் ஒரு யஹூதி வந்தார் அவர் பசியுடன் இருந்தார். நபி (ஸல்) அவர்கள் அவருக்கு உணவு கொடுத்தார்கள். அதில் நிறைய உண்டு விட்டார். பிறகு நபி (ஸல்) அவர்கள் இரவில் அவர் தூங்குவதற்காக விரிப்பைக் கொடுத்தார்கள். அவரின் வயிற்றுப் போக்கின்

காரணமாக இயற்கையாகவே இரவில் அவருக்கு மலம் வெளியாகி விட்டது. காலையில் அவர் அதே நிலையில் அந்த விரிப்பை விட்டு சென்று விட்டார். அவர் புறப்பட்டு கொஞ்சம் தூரம் தான் கடந்திருப்பார். அவருக்கு நினைவு வந்தது. நாம் சில பொருட்களை அங்கு மறந்து விட்டு விட்டோம் என்று. எனவே மறுபடியும் அந்த பொருள்களை எடுப்பதற்காக வந்த சமயம் பெருமானார் (ஸல்) அவர்களை அவர் அசுத்தம் செய்த படுக்கை விரிப்பை சுத்தம் செய்த நிலையில் கண்டார். இக்காட்சியைக் கண்டதும் அவரின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. பிறகு, "அல்லாஹ் உங்களிடம் உலகில் எவரிடமும் இருக்க முடியாத நற்குணத்தை வழங்கியுள்ளான். எனவே எனக்கு கலிமா தைய்யிபாவை கற்றுக் கொடுத்து முஸ்லிமாக ஆக்குங்கள்" எனக் கூறினார்". என்று மதனீ (ரஹ்) அவர்கள் பதிலளித்தார்கள். பிறகு அவர்கள் எனது தலைவரான நபி (ஸல்) அவர்களே ஒரு விருந்தாளிக்காக இவ்வாறு செய்துள்ளார்கள். எனவே நானும் அவர்களின் வழிமுறையை பின்பற்றினேன் என்று முடித்தார்கள். இவர்கள் தான் மனத்தூய்மையான அடியார்களாக இருந்தார்கள்.

## ஹஸ்ரத் அப்துல் மாலிக் ஸித்தீகீ (ரஹ்) அவர்களின் மனத்தூய்மை

எப்பொழுது முகஸ்துதி உள்ளத்தை விட்டு வெளியேறி விடுமோ அப்போது "நான்" என்ற ஆணவமும் உள்ளத்தை விட்டு வெளியேறி விடும். மேலும் மனிதனின் உள் பணிவு நிறைந்து விடும். பிறகு மக்களின் கடுமையான இன்னும் கசப்பான வார்த்தைகளை பொறுமையுடன் கேட்டுக் கொள்வார்.

அப்துல் மாலிக் ஸித்தீகீ (ரஹ்) அவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்தே அல்லாஹுதஆலா தீனின் பொக்கிஷங்களை கொடுத்திருந்தான். மேலும் இறுதி காலத்தில் உலக செல்வங்களையும் விசாலமாக கொடுத்திருந்தான். இதனால் அவர்களுடன் இருந்த சில உலமாக்கள் அவர்களை தரக் குறைவாக பேசலானார்கள். பலவிதமாக சம்பாதித்துவிட்டீர்கள். இவ்வளவு பெரிய பள்ளிவாசலை கட்டி முடித்து விட்டீர்கள் என்றெல்லாம் கூறினர். இதில் அல்லாஹ்வின் வல்லமையைப் பாருங்கள். பள்ளிவாசலை யாரோ கட்டுகிறார். அதன் குரோதம் யாருக்கோ உண்டாகிறது. ஆனால் ஹள்ரத் அவர்கள் அமைதியாகவே இருந்து வந்தார்கள்.

ஒருமுறை ஒரு நகரில் இருந்து ஹள்ரத் அவர்களின் சீடர் ஹள்ரத் அவர்களை சந்திக்க வந்தார். அந்த நகரத்தில் ஒரு பெரிய ஆலிம் இருந்தார். அந்த ஆலிம் இந்த சீடரை சந்தித்து எங்கு செல்கிறீர்? என்று கேட்டார். அந்த சீடர், நான் ஹள்ரத் ஸித்தீகி அவர்களை சந்திக்கச் சென்று கொண்டிருக்கின்றேன். அதற்கு அந்த ஆலிம் அப்படியானால் நான் சொல்வதை அவரிடம் சென்று எத்திவைத்து விடவும். அதாவது உலகம், மறுமை இவ்விரண்டும் இரண்டு மனைவிகளான சக்களத்தியைப் போன்று. ஒன்றை மணம் முடித்தால் மற்றொன்று சென்று விடும் உண்மையில் இதன் மூலம் ஹள்ரத் அவர்களை தாக்கினார். அதாவது இப்பொழுது உங்கள் மீது உலக அருட்கொடைகள் நிறைந்து விடப்பட்டுள்ளது. எனவே தாங்கள் உங்களின் தீனினை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுங்கள்! என்று தாக்குதல் கொடுத்தார் என்று அந்த சீடர் ஹள்ரத் ஸித்தீகி (ரஹ்) அவர்களை சந்தித்தபோது ஹள்ரத்

அவர்கள் அவரின் நிலைகளை விசாரித்தார்கள். மேலும் எதார்த்தாமாக "இந்த நகரத்தில் உள்ள பெரிய ஆலிம் எந்த நிலையில் உள்ளார்" என்று கேட்டார்கள். அதற்கு அந்த சீடர் நன்றாக உள்ளார் என பதில் அளித்தார். மேலும் அந்த ஆலிமை நீங்கள் சந்தித்தீர்களா? "அவரை நான் வழியில் சந்தித்தேன்" என அந்த சீடர் பதிலளித்தார். "அவர் உங்களிடம் ஏதேனும் கூறினாரா?" என ஹள்ரத் அவர்கள் கேட்டார்கள். ஆம் கூறினார்கள். இறைநேசர்களின் உள்ளங்களில் உள்ளதை உணர்பவர்களாக இருந்தனர். அன்னார் எப்பொழுது இந்த கேள்வியை கேட்டார்களோ அந்த சீடர் அமைதியாகிவிட்டார். உடனே ஹள்ரத் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். ஏதோ ஒரு விஷயம் நடந்துள்ளது என்று. உடனே அவர்கள் எதனை அவர்கள் கூறினார்களோ அதனை அவ்வாறே என்னிடம் கூறுங்கள் என்றார்கள். இதற்கு சீடர்களின் மனம் விரும்பாவிட்டாலும் கூறினார். ஹள்ரத் அவர்களே! எப்பொழுது நான் அவரை சந்தித்தேனோ மேலும் உங்களை சந்திப்பதாக அவரிடம் கூறினேனோ அப்பொழுது அவர் புன்முறுவல் பூத்தவராக கூறினார். நான் கூறும் விஷயத்தை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள். அதாவது உலகமும் மறுமையும் இரு மனைவிகளான சக்களத்தியைப் போன்று ஒன்றை மணம் முடித்தால் மற்றொன்று சென்றுவிடும். இதனை கேட்டதும் ஹள்ரத் அவர்கள் தலை குனிந்து விட்டார்கள். கண்களில் கண்ணீர் உகுக்க ஆரம்பித்விட்டன. அவர்களின் சட்டை துணி நனையும் அளவு அழுதார்கள்.

இப்பெழுது அந்த சீடர் பதறிவிட்டார் என்னுடைய எந்த வார்த்தை ஹஜ்ரத் அவர்களை இவ்வளவு கவலையில் ஆழ்த்தியது.

ஹஜ்ரத் அவர்கள் அதிக நேரம் அழுதுக் கொண்டிருந்ததால் அவர் “என்னிடம் இருந்து ஏதேனும் தவறு ஏற்பட்டிருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்” என்று கூறினார். ஹஜ்ரத் அவர்கள் இல்லை இல்லை உங்கள் புறத்திலிருந்து எந்த தவறும் ஏற்படவில்லை. பிறகு ஏன் இவ்வளவு அழுகிறீர்கள்? அன்னார் அவர்கள் நான் அழுவதெல்லாம் நன்றியின் காரணமாகத்தான் அதாவது இன்னும் இவ்வுலகில் இப்படிப்பட்ட நபர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் நாம் திருந்துவதில் கவலை உடையவர்கள் அவர்கள் எங்களுக்கு உபதேசங்கள் செய்து கொண்டே இருக்கிறார்கள்; என்பதினால்தான் இப்பொழுது சிந்தித்து பாருங்கள்! ஹஜ்ரத் அவர்கள் பதிலுக்கு ஏதேனும் சொல்லிருக்கலாம். ஆனால் தன்னுடைய உயர்ந்த மனத் தூய்மையால் அமைதியாக இருந்து விட்டார்கள். நாமாக இருந்தால் என்ன கூறியிருப்போம் பெரிசா பேசவந்து விட்டார் முன் பின் எதையும் பார்ப்பதில்லை என்பதாக. ஆனால் இறைநேசர்களின் வார்த்தைகளே தனிதான்.

## ஹள்ரத் மௌலானா கைர் முஹம்மது ஜாலன்திரீ (ரஹ்) உடைய மனத் தூய்மை

ஹள்ரத் மௌலானா கைர் முஹம்மது ஜாலன்திரீ (ரஹ்) அவர்கள் தானவி (ரஹ்) அவர்களின் கலீஃபாக்களில் கட்டுப்பட்டவர்களாகும். ஒருமுறை அன்னார் ஹதீஸ் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் அவர்களுக்கு ஒரு இடத்தில் சிக்கல் ஏற்பட்டது. அதற்கு அவர்கள் முடிந்த வரை சிந்தித்தார்கள். மேலும் ஓரக்குறிப்பையும் படித்துப் பார்த்தார்கள். அவர்களின்

சந்தேகம் நீங்க வில்லை. ஹள்ரத் அவர்கள் சிறிது நேரம் கழித்து எனக்கு இந்த இடத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனின் விளக்கம் என்னுடைய அறிவுக்கு எட்டவில்லை. நம்மைப் போன்று எவரேனும் இருந்திருந்தால் அந்த இடத்தில் மலுப்பியிருந்திருப்பார். எந்த இடம் புரியக்கூடியதாக இருக்குமோ அதனை விளக்கமாக நடத்திவிடுவார். எங்கு புரியவில்லையோ அங்கு இரண்டு நாட்களில் இரண்டு மாதங்களின் பாடத்தை நடத்தி இருப்பார். மாணவர்கள் அந்த இடத்தில் சந்தேகம் கேட்டால் அது இனிமேல் வரும் என்று கூறிவிடுவார். பின்பு மறுபடியும் அதுவரும் சமயத்தில் ஏற்கனவே படித்துவிட்டீர்கள் என்று கூறிவிடுவார். மாறாக அந்த பெரியார் மனத்தூய்மை உடையவராக இருந்தார்கள். எனவே மாணவர்களுக்கு கூறினார்கள். இது சம்பந்தமாக எனக்கு சந்தேகம் உள்ளது. இதன் பதில் எனக்குத் தெரியவில்லை எனவே மாணவர்களே! நீங்களும் யோசியுங்கள். பதில் தெரிந்தால் கூறுங்கள் என்று மாணவர்களிடம் தெளிவாக கூறிவிட்டார்கள். மாணவர்களும் யோசித்துப் பார்த்தார்கள். அவர்களுக்கும் பதில் தெரியவில்லை. அந்த சமயம் ஹள்ரத் அவர்களின் ஒரு மாணவர், ஹள்ரத் அவர்களிடமே ஹதீஸ் பாடத்தை ஓதி இருந்தார். அவர் நல்ல கல்வி ஞானங்களைப் பெற்றிருந்தார். எனவே ஹள்ரத் அவர்கள் அவரை தன்னுடைய மதரஸாவில் ஆசிரியராக நியமித்திருந்தார். அவரும் ஹதீஸின் ஆசிரியராக இருந்தார். சிறிது நேரம் கழித்து ஹள்ரத் அவர்கள் நான் அவரிடம் சென்று கேட்டு வருகின்றேன் என்றார்கள். ஆனால் அந்த பெரியாரின் மனதில் மாணவர்கள் என்ன நினைப்பார்கள். (அதாவது ஷைகுல் ஹதீஸ் ஆக இருந்தும் மாணவரிடம் சென்று கேட்கின்றாரே என்று எண்ணுவார்களே) என்ற

எண்ணம் சிறிதும் இல்லை. எப்போது ஹள்ரத் அவர்கள் புகாரியை எடுத்து கிளம்பினார்களோ ஒரு மாணவர் வேகமாக ஓடிச் சென்று அந்த ஆசிரியரிடம் ஹள்ரத் அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை கூறிவிட்டார். அந்த சமயம் அந்த ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்கள். எப்பொழுது அவரிடம் இந்த செய்தியை சொல்லப்பட்டதோ தமது பாடத்தை அப்படியே நிறுத்திவிட்டு வேகமாக வெளியே வந்தார்கள். வெளிவந்த உடன் அந்த பெரியார் கேட்கலானார்கள். மௌலானா! எனக்கு இந்த இடத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மேலும் சிறிது புரியாமலும் இருக்கின்றது. நான் இதனை உங்களிடம் கேட்டுச் செல்ல வந்தேன். இதனைக் கொஞ்சம் சொல்லுங்களேன் என்றார்கள். எப்பொழுது அந்த ஆசிரியர் அந்த இடத்தைப் பார்த்தாரோ அதன் பதிலை அல்லாஹ் அவரின் மனதில் உதிக்கச் செய்துவிட்டான். பிறகு கூறினார்.

ஹள்ரத் அவர்களே! நான் உங்களிடம் கல்வி பயிலும் காலத்தில் தாங்கள் தான் இந்த மஸ்அலா வை சரியான முறையில் தெளிவுபடுத்தினீர்கள். மேலும் இதனின் சரியான பதிலையும் நீங்கள் தான் கூறினீர்கள் என்று கூறி அதை தெரிவித்தார்கள். ஆனால் அந்த பெரியாரின் மாணவரான அந்த ஆசிரியர் நினைத்திருந்தால் ஹள்ரத் அவர்களே! எனது உள்ளத்தில் இதனின் பதில் வந்து விட்டது என்று கூறியிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு கூறவில்லை. ஆசிரியர் எப்படியோ அப்படிதான் மாணவரும். நமக்கும் இப்படிப்பட்ட மனத்தூய்மை கிடைக்க வேண்டுமே!

# மனத்தூய்மையான அடியார்களின் வேலையில் அல்லாஹ்வின் உதவி

ஒரு செய்தியை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். மனத்தூய்மைக்கு அல்லாஹ் மகத்தான பரக்கத்தை வைத்துள்ளான். வெளிப்படையில் அது வேலையை நிறுத்திவிடும் என்றும் முறித்து விடும் என்றும் தெரிகின்றது. ஆனால் மனத்தூய்மையாளர்களின் வேலையை அல்லாஹுதஆலா முறித்து விடுவதுமில்லை, நிறுத்தி விடுவதுமில்லை. அதற்கு சில உதாரணங்களைக் கேளுங்கள்.

1) ஒருமுறை சைய்யிதினா அலி (ரலி) அவர்கள் போரின் சமயம் ஒரு காஃபிரின் நெஞ்சின் மீது ஏறி அமர்ந்தார்கள். மேலும் அவனைக் கொன்று விட நாடினார்கள். அவன் அன்னாரின் திரு முகத்தில் துப்பிவிடுகிறான். எச்சில் முகத்தில் பட்டதும் அன்னார் அவனை விட்டு விட்டார்கள். அவர் ஆச்சரியத்துடன் நீங்கள் என்னை கொலை செய்திருக்க வேண்டுமே ஏன் விட்டு விட்டீர்கள்? என்று கேட்டார். அதற்கு அலி (ரலி) அவர்கள், நான் உன்னை அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக கொலை செய்ய நாடியிருந்தேன். இப்பொழுது நீ என் முகத்தில் துப்பியதால் என் கோபமும் கலந்து விட்டது. ஆகையால் நான் என் நஃப்ஸுக்காக யாரையும் கொலை செய்ய விரும்புவதில்லை என்றார்கள். இதனைக் கேட்ட சமயம் அவர் திகைத்துப்போய் உங்கள் மனத்தூய்மை என்னை குஃப்ரிலே மரணிப்பதை விட்டும் காப்பாற்றிவிட்டது. எனவே எனக்கு கலிமா சொல்லிக் கொடுத்து முஸ்லிமாக ஆக்குங்கள் என்று கூறி இஸ்லாத்தில் நுழைந்தார்.

வெளிப்படையில் அலி (ரலி) அவர்கள் அவரை விட்டு விட்டால் அது நஷ்டம் போல் தெரியலாம். ஆனால் அல்லாஹ் அதனை விடுவதில்லை. அந்த மனிதனுக்கு கலிமாவின் பாக்கியத்தை வழங்கினான்.

2) உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரு பகுதியின் இளவரசன் கைது செய்யப்பட்டு கலீஃபாவுக்கு முன் கொண்டு வரப்பட்டார். உமர் (ரலி) அவர்கள் அவரை கொலை செய்ய விரும்பினார்கள். ஏனென்றால் அவர் முஸ்லிம்களுக்கு பலவிதமான நோவினைகளை கொடுத்திருந்தார். எனவே அன்னார் அவரை கொலை செய்ய கட்டளையிட்டார்கள். கட்டளையிட்ட உடன் அவர் கூறினார்: நீங்கள் என்னுடைய இறுதி ஆசையை நிறை வேற்றுவீர்களா? என்றார். என்ன ஆசை என்று கலீஃபா அவர்கள் கேட்டார்கள். எனக்கு தாகம் எடுக்கிறது. தண்ணீர் குவளையில் தண்ணீரை தாருங்கள். அவருக்கு குவளையை கொடுக்கப்பட்டது. எப்பொழுது தண்ணீர் குவளையை கையில் வாங்கினாரோ அவர் அழ ஆரம்பித்து விட்டார். உமர் (ரலி) அவர்கள் ஏன் அழுகிறாய்? என்று கேட்டார்கள். எனக்கு பயம் ஏற்படுகின்றது. நான் இந்த பக்கம் தண்ணீர் குடிப்பேன். அந்த பக்கம் சிப்பாய் என்னைக் கொன்று விடுவார் என்று அஞ்சுகிறேன். எனவே என்னால் தண்ணீரை குடிக்க முடியவில்லை. அதற்கு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பயப்படாதே! நீ எதுவரை நீரை பருகமாட்டாயோ அதுவரை நீ கொலை செய்யப்படமாட்டாய். இதை சொன்ன மாத்திரமே அவர் அக்குவளையை கீழே போட்டு விட்டார். பின்பு கூறினார்: நீங்கள் எனக்கு வாக்களித்து விட்டீர்கள். நான் குடிக்கும் வரை கொலை செய்யமாட்டீர்கள் என்பதாக! உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஆம் உனக்கு வாக்களித்தேன். எனவே நான் உன்னை கொலை செய்யமாட்டேன். உன்னை கொலை செய்யமாட்டேன் என்றவுடன் அவர் கூறினார்: இதனுடன் எனக்கு கலிமாவையும் கற்றுக் கொடுத்து முஸ்லிமாக ஆக்குங்கள். அதற்கு அன்னார் கேட்டார்கள்: நீ ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஏற்றிருக்கலாமே இப்பொழுது ஏன் ஏற்றுக் கொண்டாய்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் பதிலளித்தார்: நீங்கள் ஆரம்பத்தில் கொலை செய்ய கட்டளையிட்டீர்கள். ஒருவேளை நான் அந்த சமயம் இஸ்லாத்தை ஏற்றால் மக்கள் மரணத்தை பயந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்பார்கள். எனவே நான் விரும்பினேன்: எனக்கு மரணத்தின் பயத்தை போக்கக்கூடிய சூழ்ச்சியை கையாண்டு பிறகு என் விருப்பப்படி நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்.

3) ஒரு அரசனின் நூறு சாராயக் குடங்கள் சென்று கொண்டிருந்தது. இதை ஒரு இறைநேசர் அறிந்து கோபத்தில் வந்து 99 குடங்களை உடைத்து விட்டு ஒன்றை மட்டும் விட்டு விட்டார். இது அந்த அரசனுக்கு தெரிந்த உடன் அரசன் அந்த இறைநேசரை சிறை பிடித்துவிட்டார். பின்பு அரசர் நீங்கள் ஏன் இந்த குடங்களை உடைத்தீர்கள்? அவர் கூறினார்: குடங்களில் சாராயம் உள்ளது என்பதை அறிந்தவுடன், நீங்கள் முஸ்லிமாக இருந்தும் சாராயம் குடிக்கின்றீர்களே என்ற ஈமானிய ரோஷம் இதற்கு இடம் கொடுக்க வில்லை. எனவே நான் உடைத்து விட்டேன்.

அரசர் கேட்டார்: சரி அதனை விடுங்கள். 99 குடங்கள் வரை வந்த உங்களது ரோஷம் 100 வது குடம் வரை ஏன் வரவில்லை? அந்த இறை நேசர் கூறினார், நான் 99 வரை உடைத்து விட்ட

பிறகு என் உள்ளத்தில் நான் எவ்வளவு பெரிய வேலை செய்து விட்டேன். என்ற எண்ணம் வந்தது. எனவே எனது உள்ளத்தில் சிறிது மகிழ்ச்சி ஏற்பட்டது. பிறகு நான் எண்ணினேன். 99 குடங்கள் வரை அல்லாஹ்விற்காக செய்து வந்தேன். 100 வது குடத்தை உடைத்தால் என் நஃப்ஸிற்காக உடைத்ததாக ஆகிவிடும். எனவே நான் அதனை கை விட்டு விட்டேன். எப்பொழுது அரசர் இதைக் கேட்டாரோ தண்டிப்பதற்கு பதிலாக மன்னித்து விடுதலை அளித்து விட்டார். அல்லாஹு அக்பர்!

4) அப்துல்லாஹ்பின் முபாரக் (ரஹ்) உடைய தந்தையின் பெயர் முபாரக் ஆகும். அவர்கள் ஒரு நபரின் அடிமையாக இருந்தார்கள். அவர் அன்னாரை தோட்டத்தின் கண்காணிப்பாளராக வைத்திருந்தார். சில புத்தகங்களில் அது மாதுளை தோட்டம் என்பதாக வந்துள்ளது. இன்னும் சிலதில் அது மாம்பழத் தோட்டம் என்பதாக வந்துள்ளது. ஆக அது பழங்களின் தோட்டம். அன்னார் அங்கு மூன்று வருடங்களாக வேலை செய்து வந்தார்கள். ஒரு நாள் தோட்டத்தின் முதலாளி அங்கு வந்தார். பின்பு எனக்கு பழம் கொண்டு வாருங்கள் என்றார். முபாரக் (ரஹ்) அவர்கள் ஒரு மரத்தில் இருந்து ஒரு பழம் கொண்டு வந்தார்கள். முதலாளி அதனை சாப்பிட்ட போது அது புளிப்பாக இருந்தது. எனவே நீங்கள் புளிப்பான பழத்தை பறித்து வந்துள்ளீர்கள் என்றார். மறுமுறை வேறு மரத்தில் இருந்து அன்னார் அவர்கள் கொண்டு வந்த பழமும் புளிப்பாக இருந்தது. மூன்றாம் முறையும் சென்றார்கள். அப்பொழுது கொண்டு வந்த பழமும் புளிப்பாகத் தான் இருந்தது. முதலாளி மிகவும் அதிருப்தி அடைந்து கூறினார்: மூன்று வருடமாக தோட்டத்தில் வேலை செய்கிறீர்கள்? எந்த பழம் புளிக்கும்? எது இனிக்கும் என்று

தெரியவில்லையே என்று கூறினார். அவரின் அதிருப்தி மிகைத்த சமயம் இறுதியாக முபாரக் (ரஹ்) கூறினார்கள்: நீங்கள் தோட்டத்தில் நியமித்தது அதனை பராமரிப்பதற்காகத்தான். பழங்களை உண்பதற்காக அல்ல. நான் மூன்று வருடமாக இந்த தோட்டத்தின் எந்த பழத்தையும் சாப்பிட்டதில்லை. எனவே எனக்கு எது புளிப்பானது? எது இனிப்பானது என்று தெரியாது.

இந்த செயல் முதலாளியின் உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே அவர்களை விடுதலை செய்து விட்டார். பின்பு தன் மகளுக்கு திருமணம் முடித்து வைத்தார். பிறகு அன்னார் அந்த தோட்டத்தின் முதலாளியாக ஆனார்கள். பிறகு அல்லாஹ் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையை வழங்கினான். அதற்கு அப்துல்லாஹ் என்று பெயர் சூட்டினார்கள். அவர்தான் அப்துல்லாஹ் பின் முபாரக் ஆகும். சுப்ஹானல்லாஹ்! இதுதான் மனத்தூய்மையாகும்!!!

5. இப்னு உகைல் (ரஹ்) அவர்கள் தன் நிகழ்ச்சியை எழுதுகிறார்கள். நான் மிக ஏழையாக இருந்தேன். நான் ஒருமுறை கஃபாவை தவாஃப் செய்து கொண்டிருந்த சமயம் ஒரு விலை உயர்ந்த மாலையைப் பார்த்தேன். அந்த மாலையை எடுத்துக் கொண்டேன். பின் மனோ இச்சை "அதனை மறைத்து விடுவதற்கு" கூறியது. ஆனால் எனது உள்ளம் "இது ஒருபோதும் ஆகாது. இது திருட்டாகும். எனவே இந்த சமயம் இது யாருடையதோ அவரிடம் அதனை திருப்புவது தான் அமானிதத் தன்மையாகும் என்று கூறியது. எனவே நான் மதாஃபிற்கு வந்து அறிவிப்புச் செய்து "எவருடையதேனும் மாலை காணாமல் போய்விட்டால் என்னை

அணுகி என்னிடம் வாங்கிக் கொள்ளவும் என்று கூறினேன். அப்போது என்னிடம் ஒரு கண் தெரியாத மனிதர் வந்து “இந்த மாலை என்னுடையது இது என்னுடைய பையிலிருந்து விழுந்ததாகும் என்று கூறினார். இப்போது என் மனோ இச்சை மேலும் என்னை திட்டியது. அதாவது “இது குருடருடையதாகத்தான் இருந்தது. இதனைப் பற்றி யாருக்கும் தெரியப் போவதும் இல்லை. இதனை மறைக்க நல்ல வாய்ப்பும் கிட்டியது” என்று என் மனஇச்சை என்னை பழித்தது. ஆனால் நான் அந்த மாலையை அவரிடம் கொடுத்து விட்டேன். அந்த குருடர் எனக்காக துஆ செய்துவிட்டு சென்றுவிட்டார்.

அன்னார் கூறுகிறார்கள்: நான் எனக்காக ரிஜ்க் ஏற்பாட்டிற்காக துஆ செய்து கொண்டிருந்தேன். இதில் அல்லாஹ்வின் வல்லமையைப் பாருங்கள். பிறகு நான் ஹிலஹ் என்ற ஊருக்குச் சென்று, அங்குள்ள ஒரு பள்ளிக்குச் சென்றேன். அப்பொழுது அங்கிருந்த இமாம் சில நாட்களுக்கு முன்பாகத்தான் இறந்து விட்டிருந்தார். எனவே மக்கள் என்னை தொழவைக்க வேண்டினார்கள். எனவே நான் ஒரு வேளை மட்டும் தொழவைத்தேன். அவர்களுக்கு பிடித்தமானதாக ஆகிவிட்டது. அவர்கள் நிரந்தரமாக இமாமத் செய்வதற்கு கூறினார்கள். நானும் அந்த பள்ளியிலேயே இமாமத் செய்ய ஆரம்பித்துவிட்டேன். சில காலம் இவ்வாறே சென்றது. மீண்டும் மக்கள் என்னிடம் ஹள்ரத் அவர்களே! உங்களுக்கு முன்னால் இருந்த இமாம் அவர்களுக்கு ஒரு மகள் இருக்கிறாள். இமாமானவர்கள் மரணம் சமயம் தமது மகளை நல்ல ஸாலிஹான மனிதருக்கு மணம் முடித்து கொடுக்க வேண்டும் என எங்களிடம் வஸிய்யத் செய்துள்ளார்கள். எனவே

நீங்கள் நாடினால் உங்களுக்கே திருமணம் செய்து வைக்கிறோம் என்று கேட்டார்கள். நானும் ஏற்றுக் கொண்ட உடன் திருமணம் செய்து விட்டார்கள். திருமணத்திற்கு சில காலம் கழித்து என்னுடைய மனைவியின் கழுத்தில் இருந்த மாலையை கண்டு திகைத்து விட்டேன். ஏனென்றால் எந்த மாலையை அன்று தவாப் செய்யும் சமயம் ஒரு குருடருக்கு எடுத்து கொடுத்தேனோ அதே மாலைதான் இது.

உடனே நான் அந்த மாலை யாருடையது என்று கேட்டேன். அதற்கு அவள் இதை என்னுடைய தந்தை எனக்கு கொடுத்தார் என்று கூறினாள். மேலும் உன் தந்தை யார் என்று கேட்டேன். அதற்கு அவள் அவர் ஆலிமாகவும் இந்த பள்ளியின் இமாமாகவும் மேலும் கண் தெரியாதவராகவும் இருந்தார் என்று கூறினாள். உடனே நான் அன்று மாலையை எடுத்து கொடுத்த அந்த கண் தெரியாதவர் தான் இவள் தந்தை என்பதை அறிந்து கொண்டேன். நடந்த அனைத்து விஷயங்களையும் அவளிடம் கூறிய பொழுது அவள் கூறினாள். உங்களுடைய துஆவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. என் தந்தையின் துஆவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. அது எவ்வாறு என்று வினவினேன். அவள் கூறினாள். நீங்கள் துஆ செய்ததுக்கேற்ப அல்லாஹ் உங்களுக்கு வீட்டையும் கொடுத்துவிட்டான். மேலும் மனைவியையும் கொடுத்து விட்டான். மேலும் உங்களுக்கு ரிஜ்க்கின் ஏற்பாட்டையும் செய்து கொடுத்து விட்டான். மேலும் எனது தந்தையின் துஆவையும் ஏற்றுக் கொண்டான். அது எவ்வாறு என்றால் அவர் உங்களிடமிருந்து மாலையை வாங்கிக் கொண்டு வரும் பொழுது யா அல்லாஹ்! ஒரு நம்பிக்கைக் குரிய மனிதர் என்னுடைய

மாலையை கீழே இருந்து எடுத்து கொடுத்தார். இதே போன்ற நம்பிக்கையான மனிதரை என் மகளுக்கு கணவனாக கொடுப்பாயாக! என்று துஆ செய்தார். அவ்வாறே அல்லாஹ்வும் உங்களையே எனக்கு கணவனாக கொடுத்து விட்டான் என்று கூறினாள்.

இவ்வாறே தான் அல்லாஹ் மனத்தூய்மையான அடியார்களின் வேலையை நிறுத்தி விடுவதில்லை.

6. அஹ்மத் பல்கராமி (ரஹ்) அவர்கள் ஒருதடவை ஒழு செய்து கொண்டிருந்தார்கள். ஒழு செய்து விட்டு எழுந்திருக்கும் போது பலவீனத்தால் மயக்கம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டார்கள். உடனே அவர்களுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்த மாணவர் ஹள்ரத் என்ன ஆகியது? என்று கேட்டார். அன்னார் "நான் மூன்று நாட்களாக பசியாக உள்ளேன். எனவே அதன் பலவீனத்தால் மயங்கி விழுந்து விட்டேன் என்று கூறினார்கள். உடனே அந்த மாணவர் ஹள்ரத்தை தொழுகை இடத்தில் விட்டு விட்டு உணவு எடுத்து வர சென்று விட்டார். உணவை எடுத்து வந்து ஹள்ரத்! சாப்பிடுங்கள் என்று கூறிய போது ஹள்ரத் அவர்கள் கூறினார்கள்: நான் உங்களிடத்தில் மூன்று நாட்களாக பசியாக உள்ளேன் என்று கூறிய பின்பு நீங்கள் சென்ற உடனேயே உணவை கண்டிப்பாக கொண்டு வந்துவிடுவீர்கள் என்பதாக எண்ணம் எனக்குத் தோன்றியது. இந்த ஆசை படைப்பினங்களுடன் சேர்ந்துள்ளது. அதற்கு மனோ இச்சையின் உந்துதல் என்று சொல்லப்படும். இதுவும் அல்லாஹ் அல்லாதவர்களிடம் நாடுதல் ஆகும்.

அதனையும் நான் விரும்பவில்லை. நான் என்னுடைய நம்பிக்கையை அல்லாஹ்வின் மீதுதான் வைத்துள்ளேன்.

எனவே சாப்பாட்டை சாப்பிட மறுத்துவிட்டார்கள். மாணவர் எவ்வளவு கூறியும் மறுத்துவிட்டார்கள். (வேறு வழியில்லாமல்) ஹள்ரத் நான் சாப்பாட்டை எடுத்து செல்கிறேன் என்று கூறி எடுத்து சென்று விட்டார்.

ஐந்து, பத்து நிமிடம் மறைந்திருந்து விட்டு, பின்பு திரும்பி வந்து கூற ஆரம்பித்தார். ஹள்ரத் இப்பொழுது தங்கள் மனதிலிருந்து அந்த ஆசை நீங்கியிருக்கும். நான் இப்போது மறுமுறை உணவைக் கொண்டு வந்துள்ளேன். இதனை ஏற்றுக் கொள்ளுங்களேன். ஹள்ரத் அவர்களும் உணவை ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு தான் நமது பெரியார்கள் அனைத்து விஷயங்களையும் அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக செய்துள்ளார்கள். மேலும் அல்லாஹுதஆலா அடியார்களின் நிய்யத்திற்கு தோதுவாக நடந்து கொள்கிறான்.

7. தூலூன் என்ற பெயர் கொண்ட ஒரு ஆட்சியாளர் இருந்தார். அவர் மிகவும் தீன் பற்றுள்ளவர். அவர் ஊரில் ஒருதடவை அநாதையான சிறுகுழந்தையை பார்த்தார். அக்குழந்தையின் தாய் அதனை ஈன்றெடுத்து விட்டு சென்று விட்டாள் என்பதையும் விளங்கிக் கொண்டார். எனவே அதனை தன்னுடன் எடுத்துக் கொண்டார். அதற்கு அஹ்மது என்பதாகவும் பெயர் வைத்தார். காலம் செல்ல செல்ல அஹ்மத் யதீம் என்பதாக பெயர் மாறிவிட்டது. மேலும் அந்த ஆட்சியாளர் தம் மகன்களைப் போன்று அஹ்மதை நேசித்தார். நன்கு ஒழுக்கம் கற்பித்து தனக்கு மிகவும் நெருக்கமாக ஆக்கிக் கொண்டார். அஹ்மது யதீம் மிகவும் நம்பிக்கையான

இறையச்சமுள்ள வாலிபராக ஆகிவிட்டார். அவரை சுற்றி இருந்த மக்கள் அஹ்மது யதீமின் மீது பொறாமை கொண்டனர். இவர் ஆட்சியாளரின் உண்மை மகன் அல்ல. வளர்ப்பு பிள்ளைதான் என்பது தெரிந்தது. சில காலத்திற்குப் பிறகு தூலூனுக்கு மரண நேரம் நெருங்கிய போது தனது அபுல் ஜைஷ் என்ற மகனை அழைத்து தனக்கு பிறகு முழு ஆட்சிக்கு பிரதிநிதியாக ஆக்கினார். மேலும் அஹ்மது உங்கள் சகோதரன் என்பதாகவும் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் எப்பொழுதும் அவரின் மீது தனி கவனம் வைக்க வேண்டும் என்பதாகவும் வஸிய்யத் செய்து விட்டு இறந்து விட்டார். அபுல் ஜைஷும் அஹ்மது உடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்.

ஒருதடவை அபுல் ஜைஷுக்கு ஒரு பொருளின் தேவை ஏற்பட்டது. எனவே அஹ்மத் யதீமை அழைத்து நீ இந்த சாவியை வாங்கிக் கொள். இவ்வழியாக சென்று எனது அறையை திறந்து இன்ன பொருளை எடுத்து வா என்று கூறினார். அவரும் அவ்வழியாக சென்று அபுல் ஜைஷ்வுடைய அறையை திறந்து உள்ளே நுழைந்த போது அங்கே அபுல் ஜைஷுக்கு பிரியத்திற்குரிய அழகிய அடிமைப் பெண் ஒரு ஆண் அடிமையுடன் தகாத உறவில் ஈடுபட்டிருந்தார். இதனை பார்த்த அஹ்மத் யதீம் திகைத்து விட்டார். அந்த அடிமைப் பெண்ணும் இந்த நேரத்தில் யாராவது வந்துவிடுவார் என்பதை சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அந்த ஆண் அடிமையும் அங்கிருந்து ஓடி விட்டார். உடனே அந்த அடிமைப் பெண் அஹ்மத் யதீமையும் தன்னுடன் தவறாக நடக்க அழைத்தாள். ஆனால் அவர் மிகவும் நல்லவராக இருந்ததால் அறவே மறுத்து விட்டு கீழ்வரும் வசனத்தையும் ஓதினார்.

قَالَ مَعَاذَ اللّٰهِ اِنَّهٗ رَبِّیْٓ اَحْسَنَ مَثْوَایَ ؕ

தர்ஜமா:

“அல்லாஹ் (இத்தீய செயலிலிருந்து) என்னைக் காத்தருள்வானாக. நிச்சயமாக (உன் கணவர்) என் எஜமானர், என் இடத்தை அழகாக (கண்ணியமாக) வைத்திருக்கிறார்” என்று கூறினார்.

சுப்ஹானல்லாஹ்! அல்லாஹ்வின் நல்லடியார்கள் இப்படிதான் நடந்து கொள்வர்.

பின்னர் அஹ்மத் யதீம் அபுல் ஜைஷ் சொன்ன பொருளை எடுத்துக் கொண்டு அந்த கெட்ட பெண்ணுடைய பிடியில் இருந்து தப்பித்து அறையை விட்டும் வெளியேறிவிட்டார்.

அந்த பெண் இவர் எஜமானிடத்தில் சென்று நடந்த அனைத்து விஷயங்களையும் கூறி எஜமானர் நம்மை கொன்று விடுவாரே என்பதாக எண்ண ஆரம்பித்து விட்டாள். ஆனால் அஹ்மத் யதீம் அபுல் ஜைஷ்யிடம் பொருளை கொடுத்து விட்டு வேறு எதையும் கூறாமல் மறைத்து விட்டார்.

சில தினங்களுக்குப் பிறகு அபுல் ஜைஷ் மற்றொரு திருமணம் செய்தார். அதனால் முதல் மனைவி (அடிமைப் பெண்) உடன் கழிக்க வேண்டிய நேரம் குறைந்து விட்டது. எனவே முதல் மனைவி எதன் காரணமாக கணவர் (எஜமானர்) நம்முடன் அதிக நேரம் கழிப்பதில்லை என்று சிந்தித்தாள். அப்பொழுதுதான் அவளுக்கு அஹ்மத் யதீமுடைய நினைவு வந்தது. அவர் தான் என்னுடைய

கணவருக்கு அனைத்து விஷயங்களையும் சொல்லியிருக்க வேண்டும். அதனால் தான் கணவர் நம்மை சரியாக கவனிப்பதை விட்டும் ஒதுங்கிக் கொண்டார் என்று எண்ணினாள். பெண்ணுடைய உள்ளத்தில் பொறாமை வந்து விட்டால் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விடுவாள். இவளும் எப்படியாவது அஹ்மத் யதீமை தனது வழியை விட்டும் அகற்றி விடவேண்டும் என்பதாக நினைத்தாள். ஒருநாள் அபுல் ஜைஷ் அவளை சந்திப்பதற்காக வந்தார். எப்பொழுது அவள் அவரை பார்த்தாளோ தன் கணவர் பிரியத்துடன் பார்க்கிறார் என்பதை பார்த்ததும் அவள் அழ ஆரம்பித்து விட்டாள். கணவர் ஏன் அழுகிறாய் என்று கேட்டார். அதற்கு அவள் நான் என்ன சொல்லுவேன்? ஒருநாள் அஹ்மத் என் அறைக்கு வந்தார். அவர் என்னுடன் தவறாக நடந்து கொள்ள முயன்றார். நான் மிகவும் சிரமத்துடன் அவரின் சூழ்ச்சியை விட்டும் என்னை தற்காத்துக் கொண்டேன்.

அபுல் ஜைஷ் இதனை கேட்டதும் அவருக்கு ஞாபகம் வந்தது. ஆம் நான் ஒரு தடவை பகல் நேரத்தில் அஹ்மத் யதீமிடம் சாவி கொடுத்து அனுப்பினேன். அந்த நேரத்தில் என்னுடைய மனைவியுடன் தவறாக நடந்து கொள்ள முயன்று உள்ளார். இதனை எண்ணி அவரின் கண்களில் இருந்து இரத்த கண்ணீர் வடித்தார். இவ்வளவு மோசமான மனிதனாக உள்ளான். அவரை கொலை செய்துவிட வேண்டும் என்று எண்ணினார்.

அவர் தனது தர்பாருக்கு வந்ததும் தனக்கு நெருக்கமான ஒரு அடிமையை அழைத்து அவரிடம் கூறினார். நான் ஒரு நபரை ஒரு பாத்திரத்தை கையில் கொடுத்து உன்னிடம் அனுப்புவேன். இன்னும்

அவர் அந்த பாத்திரத்தில் கஸ்தூரியை நிறப்பிக் கொடுங்கள் என்று தனது தூதுவை உன்னிடம் கூறினால் நீ செய்ய வேண்டிய வேலை என்னவென்றால் எந்த பாத்திரத்தை அந்த நபர் ஏந்தி வருகிறாரோ அந்த பாத்திரத்தில் அம்மனிதனை கொலை செய்து அவனது தலையை கொய்து அதில் போட்டு அந்த பாத்திரத்தை என்னிடம் எடுத்து வரவேண்டும்.

பின்பு அபூல் ஜைஷ். அஹ்மத் யதீமை அழைத்தார். அவருடன் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார். அவரின் கோபம் தனியாததால் அபுல் ஜைஷ். அஹ்மத் யதீமிடம் அந்த பாத்திரத்தை கையில் கொடுத்து கூறினார். “நீ இன்ன அடிமையின் பால் சென்று இந்த பாத்திரத்தை கஸ்தூரியால் நிரப்பித் தருமாறு கூறி நிரப்பி வா” என்றனுப்பினார். அஹ்மத் யதீமுக்கோ சற்றும் விளங்கவில்லை. எனினும் பாத்திரத்தை பெற்றுக் கொண்டு சென்றார். ஆனால் வழியில் எந்த அடிமை எஜமானனின் அடிமை பெண்ணுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டாரோ அதே அடிமையை சந்தித்தார். அவர் அஹ்மத் யதீமிடம் இருந்து அந்த பாத்திரத்தை வாங்கிக் கொண்டு அந்த பணியை தான் செய்வதாக கூறி சென்றார். அந்த அடிமை எப்பொழுது எஜமானரால் சொல்லப்பட்ட அந்த அடிமையின் அருகில் வந்தாரோ அந்த அடிமை உடனடியாக பாத்திரம் ஏந்திய அடிமையை கொலை செய்து விட்டார். இன்னும் அவனது தலையை கொய்து அந்த பாத்திரத்திலிட்டு அபுல் ஜைஷின் பால் அனுப்பினார். அபுல் ஜைஷ், அஹ்மத் யதீமுக்கு பகரமாக வேறு நபரின் தலையை அந்த பாத்திரத்தில் இருப்பதை கண்டு திடுக்கிட்டார். இன்னும் தான் செய்த திட்டங்களுக்கு மாற்றமாக நிகழ்துள்ளதைக் கண்டும் இன்னும் அஹ்மத் யதீம் உயிருடன் இருப்பதைக் கண்டும்

வியப்படைந்தார். மேலும் பாத்திரத்தில் கஸ்தூரிக்குப் பகரமாக அந்த அடிமையின் தலையைக் கண்ட அஹ்மத் யதீம் மிகவும் திடுக்கிட்டார்.

இப்பொழுது அபுல் ஜைஷ் அஹ்மத் யதீமிடம் கூறினார். "நான் உன்னை கொலை செய்வதற்காகத்தான் இந்த ஏற்பாட்டை செய்தேன்" என்று கூற அஹ்மத் யதீமுக்கு விஷயம் தெளிவானது. அதாவது அந்த அடிமைப் பெண்ணின் கூற்றின் காரணமாகவே அபுல் ஜைஷ் தனக்கு எதிராக இந்த ஏற்பாட்டை செய்துள்ளார். எனவே அஹ்மத் யதீம் அபுல் ஜைஷுக்கு முழு விஷயத்தையும் கூறினார். நான் தங்களுடைய மனைவியின் பாவத்தை மறைத்திருந்தேன். எனினும் இந்த கேடு கெட்ட பெண் என்னை பாதையை விட்டும் நீக்கிவிடுவதற்காக உங்களை எனக்கு எதிராக கிளப்பி விட்டாள். இயற்கையாகவே யார் மரணித்தாரோ அவர்தான் அதனை செய்திருந்தார்.

அபுல் ஜைஷ் அனைத்தையும் அறிந்தவுடன் விளங்கினாரோ இந்த அடிமைப் பெண்ணை அழைத்து வரச் சொன்னார். அவர் தன் தவற்றை ஒத்துக் கொண்டபோது! அபுல் ஜைஷ் அவளையும் கொன்று விட்டார். இப்பொழுது அபுல் ஜைஷின் சிந்தனையில் அஹ்மத் யதீமைப் பற்றிய கண்ணியமும், மதிப்பும் மேலும் அதிகமானது. மேலும் அவரை தனக்கு பின்பாக அரசராக ஆக்குவதற்காக வஸிய்யத் செய்தார். அல்லாஹு அக்பர்!!!

பாருங்கள்! யாருடைய உள்ளத்தில் இக்லாஸ் இருக்குமோ அவனை அல்லாஹ் பாதுகாப்பான். இன்னும் தீயவர்கள் மற்றும் அநியாயக்காரர்களுக்கு அவர்களின் வினையின் முடிவை அடையச்

செய்வான். மனத்தூய்மையான அடியார்கள் ஏதேனும் வேலைக்காக முன் வந்தால் அல்லாஹுதஆலா அந்த அடியாரை வெற்றி பெறச் செய்கின்றான் என்பது இறைவனின் நடைமுறையாகும்.

## மனத்தூய்மையின் மூலம் ஒற்றுமை ஏற்படுகின்றது.

உள்ளங்கள் பிளவுபடும் சமயம் இக்லாஸின் மூலம் அல்லாஹ் ஒற்றுமை ஏற்படுத்துகின்றான்.

உதாரணமாக:

1. ஹள்ரத் காஜா நிஜாமுத்தீன் அவ்லியா (ரஹ்) அவர்கள் "ஸிமாஃ" கூடும் என்பவர்களாக இருந்தார்கள். எனவே அவர்கள் கவிகளை செவியுறுபவர்களாக இருந்தார்கள்.

கவ்வாலி என்பது சாதாரண குரலோசையால் படிக்கப்படும் பாடல் தான். ஆனால் தற்போது இசை, கச்சேரிகளுடன் கூடிய பாட்டிற்கு மார்க்கம் வடிவம் கொடுக்கப்படுகிறது. இது முழுக்க முழுக்க ஹராமாகும்.

"ஸிமாஃ" என்பது இறைக்காதல், இறைதூதரின் காதலை பொதிந்துள்ள பாடல்களை கேட்பதற்கு கூறப்படும். ஹஜ்ரத் அவர்கள், சிஷ்திய்யா வழித்தோன்றலின் பெரியாராக இருந்தார்கள். அந்த வழித் தோன்றலில் உள்ள பெரியார்கள் அனைவரும் அதனை கேட்கக் கூடியவர்களாக இருந்ததால் அன்னாரும் அதனை கேட்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

இதே கால கட்டத்தில் ளியாஹுத்தீன் ஸினாஹீ (ரஹ்) அவர்கள் காஜியாக இருந்தார்கள். அவர்கள் பெரிய மார்க்கப்பற்றுள்ள நபராக இருந்தார்கள். அவர்கள் தானும் மார்க்கத்தின் மேலோட்டமான விஷயங்களில் கூட பிடிப்பானவர்களாக இருந்ததோடு மக்களையும் அதன்பால் தூண்டக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். அன்னாருக்கு இந்த கவிதைக் குழு எங்கெல்லாம் நிகழ்கின்றது என்று தெரியுமோ உடனே அங்கு சென்று அதனை களைத்து விடுவார்கள். ஆனால் காஜா நிஜாமுத்தீன் (ரஹ்) அவர்கள் அவர்களை தன்னுடைய குழுவை நோக்கி வருவதாக கண்டால் அமைதியாக தன்னுடைய கூட்டத்தை களைத்து விட்டு சென்று விடுவார்கள். இவ்வாறே இப்பெரியார்களின் முழு வாழ்க்கையும் கழிந்தது. ஆனால் இவ்விருவரில் எவரும் மற்றவருக்கு எதிராக எந்த ஒரு ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

அல்லாஹ்வின் அருளைப் பாருங்கள்:

காஜி ளியாஹுத்தீன் (ரஹ்) அவர்கள் ஒருமுறை நோயாளியாக மரணப் படுக்கையில் கிடந்தார்கள். செய்தி காஜா நிஜாமுத்தீன் (ரஹ்) அவர்களுக்கு தெரிந்த போது அன்னார் காஜி அவர்களின் வீட்டிற்கு வந்து கதவை தட்டினார்கள். காஜி ளியாஹுத்தீன் ஸினாஹீ (ரஹ்) அவர்கள் தன் பணியாளரை அனுப்பி வந்திருப்பவர் யார்? என பார்க்க சொன்னார்கள். அந்த பணியாளன் கதவை திறந்து பார்த்தால் காஜா நிஜாமுத்தீன் (ரஹ்) அவர்கள் கதவுக்கு அருகில் நின்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த பணியாளன் வந்து கூறினார். காஜி அவர்கள் இயற்கையாகவே கடின சுபாவம்

உடையவர்களாக இருந்தார்கள். இதனைக் கேட்ட உடன் அவர் கூறினார். அவரோ பித்அத் செய்யக்கூடியவர். இப்படிப்பட்ட கூட்டங்களை அறங்கேற்றுவது என் கருத்துப்படி பித்அத் ஆகும். மேலும் இந்த நேரம் இறுதி தருணமாக உள்ளது. இந்த சமயம் நான் பித்அத் செய்யக் கூடியவரை சந்திக்க விரும்பவில்லை என்று கூறிவிட்டார்கள். பணியாளன் வந்து ஹள்ரத் அவர்களிடம் காஜி அவர்கள் நீங்கள் உள்ளே வர மறுக்கிறார்கள். மேலும் அவர்களின் இறுதி நேரம் மிக நெருக்கத்தில் இருப்பதால் நான் இந்த சமயம் அல்லாஹ்வின் பால் திரும்ப விரும்புகின்றேன். எனவே நான் எந்த நபரையும் சந்திக்க விரும்பவில்லை என்று கூறுகிறார்கள் என கூறிய உடன் காஜா நிஜாமுத்தீன் (ரஹ்) கூறலானார்கள். அன்னாரிடம் சென்று கூறுங்கள்! ஒரு பித்அத் செய்யக்கூடியவர் உங்கள் கையில் தவ்பா செய்ய வந்துள்ளார்! காஜி (ரஹ்) இதனைக் கேட்ட போது அவர்கள் படுக்கையிலே இருந்தார்கள். உடனே தன் தலையின் தலை பாகையை அவிழ்த்து தன் பணியாளரிடம் கூறினார்கள். இதனை என் படுக்கையில் இருந்து கதவு வரை விரித்து விடுங்கள். மேலும் ஹள்ரத் அவர்களிடம் கூறுங்கள். இந்த தலைப்பாகையின் மீது தனது காலணிகளுடன் நடந்து வரச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். ஸுப்ஹானல்லாஹ்!!!

எப்பொழுது இருபுறமும் இக்லாஸ் இருக்குமோ அல்லாஹுதஆலா பிளவுக்குப் பகரமாக ஒற்றுமையை ஏற்படுத்தி விடுகின்றான்.

2. ஹள்ரத் தானவி (ரஹ்) அவர்களின் கான்காஹ்வில் தர்பிய்யத் கொடுக்கும் விஷயத்தில் பெரும் கடுமைகள்

காட்டப்படும். எந்தளவு என்றால் ஒருவர் மற்றவரிடம் பேசிவிட்டால் அவரை கான்காஹ்விலிருந்து வெளியாக்கப்படும். அங்கு சபை அமைப்பிலும் அதிக கடினம் இருந்தது.

உலமாக்கள் எழுதுகிறார்கள்:

எப்பொழுது ஷைகின் குணம் கடினமாக இருக்குமோ அப்பொழுதுதான் முரீதீன்களுக்கு அவர் மீது மிக அதிக கண்ணியம் பிறக்கும். பிறகு ஷைக் அவர்களும் அதிக நல்ல விதமாக தர்பிய்யத் கொடுக்கிறார்கள். மேலும் முரீதீன்களும் வெகு விரைவில் ஜொலிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதாவது ஷைகின் இந்த கடுமை காட்டுவது அவர்கள் மீது ரஹ்மத்தாக அமைந்து விடுகின்றது.

ஆனால் ஹள்ரத் மதனீ (ரஹ்) அவர்கள் தன் கான்காஹ்விற்கு வருபவர்கள் மீது மிக இரக்க சுபாவத்துடன் நடந்து கொள்வார்கள். அவருக்கு உணவும் கொடுப்பார்கள். அவருக்கு பலமுறை கைகாலை அமுக்கி விடுவார்கள். இவ்விருவர்களின் இயற்கை குணம் இந்தளவு வேறுபாடாக இருந்தது. இவ்விருவரும் பூக்களைப் போன்றவர்களாகும். ஒவ்வொரு மலரின் மணமும், நிறமும் வேறுபாடாக இருப்பதைப் போன்று இவ்விரு பூக்களின் இயற்கை குணமும் வேறுபாடாக இருந்தது.

ஒரு ஆலிம் தானவி (ரஹ்) அவர்களின் கான்காஹ்வில் சில நாட்கள் கழித்த பின்பு மதனீ (ரஹ்) அவர்களின் கான்காஹ்விற்கு பின்பு வந்தார். அங்கு சில நாள் செல்வந்தரைப் போன்று கழித்து விட்டு கூறினார். ஹள்ரத் அவர்களே! நான் உங்களிடம் ஒரு விஷயத்தைக் கேட்க விரும்புகின்றேன். ஹள்ரத் அவர்கள் என்ன

கேட்க விரும்புகின்றீர்? அதற்கு அந்த ஆலிம், நான் தானவி (ரஹ்) அவர்களின் கான்காஹ்வில் சில நாள் கழித்து விட்டு வந்துள்ளேன். அங்கோ மிக கடினம் காட்டி, வந்தவர்களை வேதனைக் குள்ளாக்கி விடுகிறார்கள். மேலும் இந்த இடத்திலோ இந்த அளவு நேசம் கிடைக்கின்றது. அதாவது வந்தவர்களை இளவரசர்களைப் போன்று ஆக்கப்படுகின்றது. தாங்கள் இவ்விஷயத்தின் தெளிவை விளக்குங்களேன் என்று கேட்டுக் கொண்டதும் இந்த சமயம் நம்மைப் போன்ற சாதாரண நபர்களாக இருந்திருந்தால் பதிலுக்கு என்ன கூறியிருப்போம்? ஆனால் அவர்களோ செம்மைப் படுத்தப்பட்ட நபர்களாக இருந்தார்கள். எனவே தான் அவர்கள் இவ்வளவு அழகாக பதிலளித்துள்ளார்கள்.

மதனீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

நன்றாக விளங்கிக் கொள்ளுங்கள். அங்கோ பெரிய மருத்துவர் இருக்கின்றார். அறுவை சிகிச்சை நிபுணர்கள் உள்ள இடமாகும். மேலும் அறுவை சிகிச்சை நிபுணர் எப்பொழுதுமே உடலை கிழித்துக் கொண்டும் காயங்களில் உள்ள மாசுக்களை அகற்றிக் கொண்டும் இருக்கிறார்கள். இதன் மூலம் அங்குள்ளவர்களுக்கு இது கடினமாக இருக்கும். எனவே தான் நீங்களும் அங்கு கடினத்தை உணர்ந்தீர்கள். என் அந்தஸ்த்து இருக்கின்றதே Componter ன் அந்தஸ்த்தை போன்றது. அவரின் வேலை என்பது எப்பொழுது மருத்துவர் தன் சிகிச்சையை முடித்து விடுவாரோ அந்த நோயாளியின் காயங்களின் மீது கட்டுப்போடுவதும், மருந்து பூசுவது மட்டும் தான். எனவே தான் வரக் கூடியவர்களுக்கு சுகமாக இருக்கின்றது. எனவே மக்கள் இங்கு மிக அழகான முறையில் நடந்துக் கொள்ளப்படுகின்றது என்று நினைத்துக் கொள்கின்றனர்.

அந்த பெரியார்களிடம் இக்லாஸ் நிறைந்து இருந்தது. எனவே தான் உள்ளங்கள் முறியும் சமயத்தில் கூட இணைப்பு ஏற்படுகின்றது. இதன் மூலம் தான் மக்கள் நம்மிடம் நெருங்குகிறார்கள். அல்லாஹுதஆலா நமக்கு இஹ்லாஸ் என்ற அருள் பெரும் பாக்கியத்தை தருவானாக! ஆமீன்.

## முகஸ்துதியின் மூன்று அடையாளங்கள்

நம்முடைய பெரியார்கள் முகஸ்துதியின் மூன்று அடையாளங்களை குறிப்பிடுகிறார்கள். இதன் காரணமாக ஒரு மனிதன் தான் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை அளவிட முடியும்.

## முதல் அடையாளம்

தனிமையில் சோம்பலான நிலையிலும் எல்லோருக்கும் முன்னிலையில் ஆர்வமாக இருப்பது. அதாவது தனிமையில் வணக்கங்களில் பொடுபோக்காக இன்னும் சோம்பலாக இருப்பது. தொழுகையை சுருக்கமாக தொழுவது ஆனால் மக்களுக்கு முன்னிலையில் மிகவும் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றான். எப்பொழுது மக்கள் பார்க்கிறார்களோ அப்பொழுது பெரிய சூஃபியாக ஆகிவிடுகிறான். இச்சமயம் அவன் இஷ்ராக் உடைய நபில் தொழுகையை மட்டும் தொழுவது கிடையாது அவனுக்கு கடந்த களாவான தொழுகைகளும் ஞாபகம் வந்து விடுகின்றது. மக்கள் பார்க்கவில்லை யென்றால் அதுசமயம் அவனுக்கு ஃபர்ளு தொழுகை கூட சிரமமாக தெரிகின்றது.

இதே நிலை தான் சில மாணவர்கள் மதரஸாவில் இருக்கும் வரை நல்ல முறையில் நடக்கிறார்கள். எப்பொழுது வீடு செல்கிறார்களோ அவ்வளவு தான் விழுந்தே விடுகிறார்கள். இது மனத்தூய்மைக்கு எதிரான விஷயமாகும்.

எந்த விதத்தில் மதரஸாவிலே அமல்களில் பேணுதலாக இருந்தார்களோ நாம் நாடுவது வீட்டுக்குச் சென்ற பொழுதும் அதே போன்று அமல்களில் பேணுதலாக இருக்க வேண்டும் என்பதுதான். ஏனென்றால் மதரஸாவில் வைத்து எந்த இறைவனை பொருந்திக் கொள்ள வைத்தோமோ அதே இறைவனை அங்கும் பொருந்திக் கொள்ள வைக்க வேண்டும்.

## இரண்டாவது அடையாளம்

உலக ஆதாயம் கொண்டவர்களிடம் இருந்து புகழை எதிர்பார்ப்பது. அதாவது மக்கள் என்னை புகழ வேண்டும் என்று ஆசை கொள்வது,

பாருங்கள்! புகழ் முகஸ்துதிகாரனுக்கும் கிடைக்கும். இன்னும் மனத்தூய்மையான அடியானுக்கும் கிடைக்கும். ஆனால் இரண்டிற்கும் மத்தியில் வித்தியாசம் இருக்கின்றது. முகஸ்துதிக்காக நடப்பவன் தன் உள்ளத்தில் புகழை விரும்புவான். மனத்தூய்மை உள்ளவரை புகழப்படும் போது அவரது உள்ளம் அழுது கொண்டு இருக்கும்.

இதை போன்று இமாமுல் அஃளம் விஷயத்தில் கூறப்பட்டு உள்ளது. அதாவது அன்னாரை எவரேனும் புகழ்ந்தால் அவர்கள் தனிமையில் அமர்ந்து யா அல்லாஹ்! நீ இந்த மக்களை என்னைப்

பற்றி நல்லதை நினைக்க வைத்தாய். அவ்வாறே என்னையும் ஆக்கிவிடுவாயாக என்பார்கள்.

தாய், தந்தை, பீர், ஆசிரியரின் புகழாக இருந்தால் நல்லது தான். மேலும் ஒருபடி மேலாக இது வரவேற்கத்தக்கது. எனவே எவரேனும் ஆசிரியர் புகழ்வதற்காக நன்றாக படித்தால் அது நல்லது தான்! ஏனென்றால் அவர் அந்த ஆசிரியரை அல்லாஹ்வின் நல்லடியாராக கருதுகிறார். மேலும் இந்த அல்லாஹ்வின் நல்லடியாரை மனமகிழ்வு படுத்திவிட்டால் அவர் துஆ செய்வார். இந்த துஆவின் பரக்கத்தால் அல்லாஹ்வும் என்னை பொருந்திக் கொள்வான் என்ற எண்ணமே அவருக்கும் இருக்கும்.

ஒரு நபர் ஹள்ரத் தானவி (ரஹ்) அவர்களிடம் கூறினார்: ஹள்ரத் உங்களுடைய முரீதீன்கள் தங்களுக்கு இவ்வளவு அஞ்சுகிறார்கள். அந்த அளவிற்கு இறைவனை கூட அஞ்சுவது கிடையாது. ஹள்ரத் அவர்கள் அவரை அமர வைத்து கூறலானார்கள். சகோதரரே! பாருங்கள். நான் என்ன காவல் அதிகாரியா? அவர்கள் என்னை எதற்காக அஞ்சுகிறார்கள்? அவர் கூறினார். ஹள்ரத் அவர்களே! தங்களை அல்லாஹ்வுடைய நேசர் என்றும், தாங்கள் கோபப்பட்டால் அவர்களின் முடிவு மோசமானதாக ஆகிவிடுமோ என்பதனையும் கருதுகிறார்கள்.

இதன் பின் ஹள்ரத் (ரஹ்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் என்னை இறைவனின் நண்பர் என்று கருதுகிறார்கள். எனவே, நான் கோபப்பட்டால் அல்லாஹ் கோபப்படுவான் என்று கருதினால் இதன் காரணமாக என்னை அஞ்சுவது அசலிலே அவர்களுடைய உள்ளத்திலே போட்ட அல்லாஹ்வுடைய அச்சத்தின் ஒரு கதிராகும்.

இதன் காரணமாக அல்லாஹ்வுடைய நேசர்களை புகழ்வது பெரியார்களை புகழ்வது நல்லதாக இருக்கின்றது. இன்னும் அவர்களுடைய பிரார்த்தனையின் காரணமாக மனிதன் முன்னேறு கின்றான். இதன்று பொதுவாகவே உள்ளத்தில் படைப்பினங்களின் புகழை நாடுவது தவறாகும். இதன் காரணமாகவே நல்லடியார்கள் உரையை நிகழ்த்திவிட்டு சுப்ஹானல்லாஹ்! என்று கூறுகின்றனர்.

(கூறக்கூடிய வார்த்தைகளில் மிக உயர்ந்த வார்த்தை சுப்ஹானல்லாஹ் என்பதாகும்)

இன்னும் அல்லாஹ்வின் அடியார்களே! இவ்வாறு கூறுங்கள். சகோதரரே! அல்லாஹ்வை நினைவு கூறுங்கள். அப்படி இல்லையென்றால் மக்களிடமிருந்து சில தடவை சுப்ஹானல்லாஹ் கிடைத்து விட்டால் உங்களுக்கு உங்களுடைய உரையின் பகரம் கிடைத்து விடும். ஆயினும் இப்படி செய்தால் இங்கிருந்து விடை பெற்று சென்ற பின்பு செயல்களின் பட்டோலையில் எதுவும் எழுதப்பட்டு இருக்காது. ஆக படைப்பினங்களிடமிருந்து புகழின் ஆசை இருக்க கூடாது. மாறாக உள்ளத்திலே என் எஜமானனே! நான் இந்த செயலை உன்னுடைய பொருத்தத்திற்காக செய்தேன் என்றும் உன்னுடைய சந்நிதானத்திலே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

## மூன்றாவது அடையாளம்

எப்பொழுதாவது படைப்பினங்களில் இருந்து யாரேனும் ஒரு மனிதர் தீனுடைய பணியிலே அவனை குறை கூறிவிட்டால் அவன் அந்த தீனுடைய பணியை விட்டு விடுகிறான். இன்னும் கொஞ்சம்

ஏதாவது பேசிவிட்டால் சுன்னத்தின் படி அமல் செய்வதையும் விட்டு விடுகிறான்.

தாங்கள் கேள்விபட்டு இருப்பீர்கள். அதாவது திருமண சமயத்தில் அதிகமான பெண்கள் இப்படி செய்து விட்டால் மக்கள் என்ன சொல்வார்களோ என்று கூறுவார்கள். அவர்கள் எப்பொழுதாவது இப்படி செய்தால் அல்லாஹ் என்ன கூறுவான் (அல்லது) நபி (ஸல்) என்ன சொல்வார்கள்? என்று கூறியுள்ளார்களா? அல்லாஹ் இன்னும் அவனுடைய தூதரை பற்றிய சிந்தனை கூட வருவதில்லை. மாறாக நாம் இப்படி செய்தால் கௌரவம் இல்லாமல் போய்விடும் என்று கருதுகிறார்கள். சகோதரரே! உலகத்திலே என்ன மதிப்பு குறைந்து விடும். யாருடைய கண்ணியம் நாளை மறுமை நாளில் குறைந்து விடுமோ அவரை அனைத்து படைப்பினங்களும் பார்க்கும். ஆக திருமணத்தில் இசைக் கருவி இசைக்கப்படவில்லை என்று மக்கள் பேசினாலும் பரவாயில்லை. அதன் காரணமாக மனதை குழப்பிக் கொள்ள வேண்டிய எந்த அவசியமும் இல்லை. மனிதர்கள் கூறினால் கூறிக் கொண்டே இருக்கட்டும் நாம் யாருடைய பொருத்தத்திற்காக இந்த வேலை செய்கிறோமோ அந்த இறைவன் என்ன கூறுவான்? என்று பார்க்க வேண்டும்.

அல்லாஹ் நம்மை முகஸ்துதியின் இந்த மூன்று அடையாளங்களை விட்டு பாதுகாப்பானாக! இன்னும் முழு வாழ்க்கையும் மனத்தூய்மையுடன் அமல்கள் செய்ய தவ்ஃபீக் செய்வானாக!

## மனத்தூய்மையான அடியார்கள் அதிகம் புகழப்படுவார்கள்

இன்னொரு விஷயமும் நினைவில் வைக்க வேண்டும். அதாவது முகஸ்துதியுள்ள அடியான், "தான்" புகழப்பட வேண்டும் என்று எண்ணுகிறான். ஆனால் இந்த அடியேன் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு கூறுகிறேன். அதாவது முகஸ்துதிக்காரன், தான் புகழப்பட வேண்டும் என்று விரும்புகிறான். ஆனால் அல்லாஹ் படைப்பினங்களின் புகழை விரும்பாத மனத்தூய்மையுள்ள அடியான் புகழப்படும் அளவு இந்த முகஸ்துதிகாரனை புகழப்பட வைப்பதில்லை.

எவரின் உள்ளம் படைப்பினங்களின் புறத்தில் இருந்து புகழ்ச்சிக் கிடைப்பதைக் கொண்டு அழுது கொண்டிருக்கின்றதோ அவருக்கு அல்லாஹ்விடத்தில் கூலியும் கிடைத்துவிட்டது. மேலும் படைப்பினங்களில் வாய்களை புகழவும் வைத்துவிட்டான் என்றால் இதில் - இந்த வழியில் அல்லவா இன்பம் உள்ளது!.

## எவ்வளவு மனத்தூய்மையோ அவ்வளவு கூலி

ஒரு அடிப்படையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு மனத்தூய்மை அதிகரிக்குமோ அவ்வளவு கூலி அதிகரிக்கும். அமல் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் மனத்தூய்மையின் காரணமாக சிறிய அமலும் அல்லாஹ்வுடைய பார்வையில் பெரியதாகி விடுகின்றது. நீங்கள் வைரத்தைப் பார்த்திருப்பீர்கள். சிறியதாக இருக்கும். ஆனால் அந்த சிறிய

வைரத்துடைய விலை பல இலட்சம் ரூபாய்களாகும். பார்ப்பதற்கு சிறியது. மதிப்பில் பெரியது. இதேபோன்று தான் மனத்தூய்மையுள்ள அடியானுடைய அமலை வைரத்தைப் போன்று மதிப்புக் குள்ளாக்கப்படுகின்றது.

## இமாம் அபூதாவூது (ரஹ்) அவர்களின் மனத்தூய்மை

இமாம் அபூதாவூது (ரஹ்) அவர்கள் பெரிய முஹத்திஸாவார்கள். (ஹதீஸ் கலை வல்லுனராக இருந்தார்கள்). ஒருமுறை அவர்கள் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களின் எதிரில் இன்னொரு படகு வந்து கொண்டிருந்தது. அந்த எதிரில் உள்ள படகு மிக நெருக்கமாக வந்த சமயத்தில் இமாம் அவர்களுக்கு தும்மல் வந்தது. யார் தும்புவாரோ அல்ஹம்துலில்லாஹ் என்று கூறவேண்டும். அல்ஹம்துலில்லாஹ் என்ற வார்த்தையை கேட்பவர் அதற்கு யர்ஹமுகல்லாஹ் என்று பதில் அளிக்க வேண்டும். பிறகு தும்மியவர் யஹ்தீகுமுல்லாஹ் என்று கூற வேண்டும். எனவே இமாம் அவர்கள் தும்மியதற்காக அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினார்கள். அருகிலுள்ள கப்பலில் உள்ள ஒரு நபர் இமாம் அல்ஹம்துலில்லாஹ் சொன்னதைக் கேட்டு அதற்கு யர்ஹமுகல்லாஹ் என்று பதில் கூறினார். ஆனால் அபூதாவூது (ரஹ்) அவர்கள் பதில் கூறுவதற்குள் இவருடைய சப்தம் கேட்காத அளவு அந்த படகு தூரமாக சென்று விட்டது. எப்பொழுது கரைக்குச் சென்றார்களோ இன்னொரு படகை வாடகைக்கு எடுத்தார்கள். வாடகையாக ஒரு திர்ஹம் கொடுத்தார்கள். அந்த படகில் ஏறி திரும்பி யர்ஹமுகல்லாஹ் சொன்ன மனிதர் வரை சென்று அந்த மனிதருக்கு யஹ்தீகுமுல்லாஹ் என்று சொல்லி விட்டு திரும்பினார்கள். இரவில் தூங்கும் போது ஒரு அழைப்பாளர்

கூறினார். அபூதாவூதுக்கு ரஹ்மத் சுபச் செய்தி உண்டாகட்டும். ஒரு திர்ஹத்திற்குப் பகரமாக அல்லாஹ்விடம் சுவனத்தை வாங்கிவிட்டார். அல்லாஹுஃ அக்பர்! முஹத்திஸீன்கள் அல்லாஹ் உடைய பொருத்தத்திற்காக இவ்வாறு மனத்தூய்மையுடன் அமல் செய்தார்கள். இதன் காரணமாக இன்று அவர்களுடைய புகழ் பேசப்படுகிறது. இன்று உலகம் அவருடைய கிதாபுகளை படித்து கொண்டிருக்கிறது. மேலும் அந்த கனவான்கள் தங்கள் கப்ருகளிலே அதனுடைய நன்மையையும், கூலியையும் பெற்று கொண்டிருக்கிறார்கள். மனத்தூய்மையான அடியானின் முயற்சி சிறியது. மேலும் அவனுடைய கூலி பெரியது. அவர்கள் வேலையை குறைவாக செய்கிறார்கள். ஆனால் அல்லாஹ்விடமிருந்து பெரிய கூலியை அடைகிறார்கள்.

## இறை பொருத்தம்

முக்கியமான நல்லடியார்கள் தங்கள் நற்செயல்களை பிறரை விட்டும் மிகவும் மறைப்பார்கள். எப்படி மக்கள் தங்கள் பாவங்களை மறைக்கின்றனரோ அதுபோல.

ஏனெனில் அவர்கள் அல்லாஹுஃத்தஆலாவின் பொருத்தத்திற் காகவே அமல் செய்கின்றார்கள். நம்முடைய பெரியார்களும் தம் நற்செயல்களை மற்றவர்களைவிட்டும் மறைப்பர். எவருக்கும் அதை தெரியப்படுத்த மாட்டார்கள். இதற்கும் பல உதாரணங்கள் உள்ளன.

1. ஆயிஷா (ரலி) அவர்களுடைய அமல் இதுவாகும். யாராவது யாசகர் அவர்களுடைய வீட்டு வாசலில் வந்தால் தன்னுடைய பணிப்பெண்ணிடம் காசு கொடுத்து அனுப்புவார்கள். மேலும் கதவருகில் வந்து அந்த யாசகர் என்ன கூறுகிறார் என்று

கேட்பார்கள். பணிப்பெண்ணுக்கும் இந்த விஷயம் தெரியும் அவள் ஒருமுறை உம்முல் முஃமினீன் அவர்களே! உங்களுடைய ஒரு செயல் எனக்கு புரியவில்லை. யாராவது யாசகர் வந்தால் அவருக்கு நீங்கள் என்னிடம் காசு கொடுத்தனுப்புகிரீர்கள் ஆனால் வாங்கி விட்டு அவர் என்ன கூறுகிறார் என்று திரைக்கு பின்னாலிருந்து கேட்கிறீர்கள். இதன் காரணம் என்ன? உம்முல் முஃமினீன் அவர்கள் கூறுகிறார்கள்:- அவர் எனக்காக என்ன துஆ செய்கிறார் என்று நான் சென்று கேட்கிறேன். அவர் எனக்கு என்ன துஆ செய்கிறாரோ அதே துஆவை நானும் அந்த அடியானுக்கு செய்துவிடுகிறேன். எனது துஆ அவருடைய துஆவுக்கு பகரமாக ஆகிவிட வேண்டும் என்பதற்காக. ஆனால் அமலுடைய கூலியை நான் என்னுடைய இறைவனிடம் வேண்டுகிறேன். சுப்ஹானல்லாஹ்! தன்னுடைய அமலுக்கு பகரத்தை அல்லாஹ்விடம் பெற வேண்டும் என்ற விஷயத்தில் அவர்கள் எவ்வளவு கவனமாக இருந்துள்ளர்கள்.

2. ஹள்ரத் ஸஃதுப்னு அபீவக்காஸ் (ரலி) மதாயினை வெற்றி பெற்று சில நாட்களுக்கு பிறகு கனீமத் பொருளை ஒன்று சேர்த்த போது வீரர் ஒருவர் வந்தார். அவர் ஏதோ ஒரு பொருளை துணியில் சுற்றி மறைத்து வைத்திருந்தார். அவர் அந்த பொருளை வெளியே எடுத்து கூறினார். படை தளபதியே! நான் இந்த அமானிதப் பொருளை உங்களிடம் கொடுக்க வந்துள்ளேன். ஸஃதுப்னு அபீ வக்காஸ் (ரலி) அதனை திறந்த போது அது மதாயின் அரசனின் கிரீடமாக இருந்தது. அந்த கிரீடம் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது. அதில் விலையுயர்ந்த முத்துக்களும், வைரங்களும் பதிக்கப்பட்டிருந்தன. அதை அந்த வீரர் விற்று சாப்பிட்டிருந்தால் அவரின் ஒரு தலைமுறை வரை சம்பாதிக்கும் தேவையே

இருக்காது. அந்த கிரீடம் அந்தப் போரில் கொல்லப்பட்ட அரசனுடையது. அது எங்கோ கீழே விழுந்துவிட்டது. அது வீரருக்கு மண்ணில் இருந்து கிடைத்தது. அந்த கிரீடம் அந்த வீரரிடம் இருப்பது யாருக்கும் தெரியாது. அதனை மறைத்து வைத்திருந்தார். எல்லாப் பொருள்களும் ஒன்று திரட்டப்பட்ட போது அந்த வீரர் ஸஃதுப்னு அபீவக்காஸ் (ரலி) அவர்களிடம் அந்த கிரீடத்தை சமர்ப்பித்தார். ஸஹாபி (ரலி) அவர்கள் அந்த வீரரின் மனத்தூய்மையைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். யாருக்கும் இந்த கிரீடம் பற்றி தெரியாது. இவரும் ஒரு ஏழையாக இருந்தார். எனவே அதனை அவர் வைத்திருக்க முடியும். ஸஹாபி அவர்கள் அந்த வீரரின் மனத்தூய்மையினால் திகைத்துவிட்டார்கள். அவரிடம் கேட்டார்கள். வீரரே! உங்கள் பெயர் என்ன? இந்த கேள்வி கேட்டவுடன் அந்த வீரர் தன் முகத்தை திருப்பிக் கொண்டு தன் முதுகை காட்டிக் கூறினார். எந்த இறைவனின் பொருத்தத்தைப் பெறுவதற்காக நான் இந்த கிரீடத்தை ஒப்படைத்தேனோ அந்த இறைவன் என் பெயரை அறிவான். இதைக் கூறிவிட்டு ஸஃது ரலியல்லாஹுஅன்ஹு அவர்களின் சபையை விட்டு வெளியேறி விட்டார்.

3. மஸ்லமப்னு அப்துல் மலிக் ஒரு ஆட்சியாளராக இருந்தார். ஒருமுறை அவர் படை எடுத்துச் செல்லும் போது எதிரிகள் ஒரு கோட்டைக்குள் மறைந்து பாதுகாப்புப் பெற்றுக் கொண்டார்கள். முஸ்லிம்கள் அந்த கோட்டையை முற்றுகையிட்டார்கள். இந்த முற்றுகை பல நாட்கள் தொடர்ந்தது. அந்த எதிரிகள் முஸ்லிம்கள் நுழைய எந்த ஒரு வழியும் ஏற்படாத அளவு தடுத்துக் கொண்டிருந்தார்கள். எதிரிகளிலிருந்து ஒரு மனிதன் கோட்டை

சுவற்றின் மீது ஏறி நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை இழிவு படுத்தும் வார்த்தைகளைக் கூறினான். முஸ்லிம்கள் விரைவாக வெற்றி கொள்ள நாடினார்கள். ஆனால் முஸ்லிம்கள் நெருங்கும் போது அந்த எதிரி அம்பு மழை பொழிவான். எனவே அவர்கள் பின்வாங்கி விடுவார்கள்.

அல்லாஹ்வின் நாட்டத்தைப் பாருங்கள்: ஒருநாள் ஒரு முஸ்லிம் இளைஞர் சிறு படையுடன் சென்றார். அம்புகளைக் கண்டுக் கொள்ளாமல் முன்னேறினார். அம்புகள் அவர்களை பதம் பார்த்துக் கொண்டிருந்தது. அவர் தன் தலையை மட்டும் பாதுகாத்தார். இறுதியாக அம்புகளை கடந்து சுவற்றிற்கு அருகில் சென்று உட்கார்ந்து கொண்டார். இப்பொழுது அவர் உட்கார்ந்த இடத்தில் அம்புகள் வராது. அங்கு அவர் சுவற்றை உடைக்க ஆரம்பித்தார். அதைப்பார்த்து இன்னும் சில முஸ்லிம் வாலிபர்கள் அவருடன் இணைந்து கொண்டார்கள். இறுதியாக அந்த சுவற்றில் ஒரு ஓட்டை போட்டுக் கொண்டார்கள். சில முஸ்லிம் வாலிபர்கள் அந்த ஓட்டை வழியாக உள்ளே நுழைந்தவுடன் அல்லாஹ் அந்த கோட்டையை வெற்றி பெறச் செய்தான். அந்த வாலிபருடைய வீரதீரமான செயலைக் கண்டு படையில் உள்ளவர்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். படையில் உள்ள அனைவரும் இந்த ஓட்டை போட்டவர் யார்? என்பதை அறிய ஆவலாக இருந்தார்கள். வெற்றி கிடைத்த பிறகு எல்லா மக்களும் ஒன்று சேர்ந்தார்கள். அச்சமயத்தில் படை தளபதி எழுந்து நின்று கூறினார். ஓட்டை போட்டவரை நான் அறிவதற்காக, அல்லாஹ்விற்காக எழுந்து நிற்குமாறு வேண்டுகிறேன். இதனை கூறியவுடன் ஒரு வாலிபர் எழுந்து நின்றார். அமீருல் முஃமினீன் அவர்களே! நானும் உங்களிடம்

அல்லாஹ்விற்காக கேட்கிறேன். நீங்கள் என்னை நிற்க வைத்து விட்டீர்கள். ஆனால் என் பெயரை மட்டும் கேட்காதீர்கள். எனவே படைத்தளபதி அவருடைய பெயரை கேட்க முடியவில்லை. பிறகு அவர் மறைந்து விட்டார். யாருக்கும் அவரின் பெயர் தெரியாமலேயே போய்விட்டது. படைத்தளபதி அவரின் இந்த செயலை கண்டு மிகவும் சந்தோஷம் அடைந்து துஆ செய்தார். யா அல்லாஹ்! கியாமத் நாளில் என்னை அந்த சுவற்றை துளையிட்ட நபருடன் எழுப்புவாயாக! சுப்ஹானால்லாஹ்! அந்த வாலிபரிடம் எவ்வளவு மனத்தூய்மை இருந்திருந்தால் இவ்வளவு பெரிய செயலை செய்து விட்டு தன்னுடைய பெயர் கூட மக்களுக்கு தெரிவதை அவர் விரும்பாமல் இருந்திருப்பார்.

4. ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டில் அபூ உமர் முஜாஹித் என்ற பெரியார் வாழ்ந்து வந்தார். அன்னாரின் காலகட்டத்தில் அந்த சமயத்தின் ஆட்சியாளர் மக்களின் நலவுக்காக ஒரு விஷயத்தை செய்ய நாடி இருந்தார். ஆனால் அதற்கு அதிக செல்வம் தேவைப்பட்டது. அந்த சமயம் அவரிடம் அந்த தொகை இல்லை. அவர் அபூ உமர் முஜாஹித் (ரஹ்) அவர்களிடம் ஹள்ரத் அவர்களே! நான் இந்த ஸதகா ஜாரியாவின் அமலை செய்ய விரும்புகிறேன். ஆனால் என்னுடைய கஜானாவில் அதற்குரிய தொகை இல்லை என்று கூறினார். ஹள்ரத் அவர்கள் அவருக்கு இரண்டு இலட்சம் தீனார் வழங்கினார்கள். இந்த தொகையை பெற்றதும் அவர் மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

அடுத்த நாள் அவர் மக்களை ஒன்று கூட்டினார். மேலும் மக்களை அந்த நற்காரியத்தின் மீது ஆர்வமூட்டினார். மேலும் உங்களிடம் மீதமாக எஞ்சியுள்ள செல்வத்தை கொடுங்கள் என்று

கூறிக் கொண்டிருந்த தருணத்திலேயே “ஹள்ரத் அபூ உமர் முஜாஹித் (ரஹ்) அவர்கள் எனக்கு இரண்டு இலட்சம் தீனார் கொடுத்துள்ளார்கள் என்றார். அவர் இதனைக் கூறியதுமே ஹள்ரத் அபூ உமர் முஜாஹித் (ரஹ்) எழுந்து நின்று, தலைவர் அவர்களே! என் புறத்தில் இருந்து ஒரு தவறு ஏற்பட்டு விட்டது. நானோ உங்களுக்கு இந்த தொகையை கொடுத்து விட்டேன். ஆனால் என்னுடைய தாயாரிடம் இதற்கான அனுமதி பெறவில்லை. அதற்காக என் தாயாரிடம் அனுமதி வாங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என நான் விரும்புகிறேன். எனவே என்னுடைய அந்த தொகையை என்னிடம் திருப்பித் தந்து விடுங்கள். எப்பொழுது அன்னார் இவ்வளவு மக்களுக்கு மத்தியில் தன் தொகையை திருப்பிக் கேட்டார்களோ அந்த சமயம் அவர்களை புகழ்ந்து கொண்டிருந்தவர்களெல்லாம் இவர்களை தீய பார்வையால் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். மேலும் அவர் எவ்வளவு மோசமான நபராக இருக்கிறார் என்று கூறினார்கள். தலைவர் அவர்களுக்கும் அந்த தொகையை திருப்பித் தர நிர்பந்தம் ஏற்பட்டது. அந்த தலைவர் அந்த தொகையை கொடுக்க அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். மக்களெல்லாம் களைந்து சென்று விட்டார்கள். அன்றிரவு ஹள்ரத் அவர்கள் அதே இரண்டு இலட்ச தீனாரை எடுத்து வந்தார்கள். பின்பு தலைவரிடம் கூறினார்கள். தாங்கள் என்னை அழித்து விட நாடினீர்கள். அல்லாஹ் என்னை பாதுகாத்து விட்டான். நான் இதை என்னுடைய தாயுடைய உடமை என சமாளித்து விட்டேன். இது எனது உடமைதான். இப்பொழுது நான் இதை அல்லாஹ்வின் பெயரால் கொடுக்கிறேன். நீங்கள் யாரிடமும் என்னுடைய பெயரை சொல்லிவிட வேண்டாம் என்று கூறினார்கள்.

4. அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் ஒரு அமலை உள்ளத்தின் காதால் கேட்டுக் கொள்ளுங்கள். ஒரு தடவை உமர் (ரலி) அவர்கள் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் அவைக்கு வந்தார்கள். அங்கே மதீனாவின் ஆதரவற்ற ஏழைகளின் பட்டியல் படிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதிலே எழுதப்பட்டிருந்தது. இவர் வயோதிகமான நபர், இவர் வயோதிகப் பெண்மணி. இவர் நோயாளி. இவர் தேவையுள்ளவர். இன்னும் அவர்களுக்கு பணிவிடை செய்வதற்கு எவருமில்லை. எனவே எந்த, எந்த மக்கள் யார், யாருக்கெல்லாம் பணிவிடை செய்வதாக பொறுப்பெடுத்துள்ளார் களோ அவர்களின் பெயர்களையும் அந்த பட்டியலில் எழுதப்பட்டது. அந்த பட்டியலை உமர் (ரலி) அவர்கள் வாங்கிப் பார்த்தார்கள். அதில் ஒரே ஒரு வயோதிகப் பெண்மணிக்கு மட்டும் பணிவிடை செய்வதற்கு நபர் இல்லாமல் இருந்தது. என்ன வேலை என்றால் அந்தப் பெண்மணியின் வீட்டை பெருக்கி அவளுக்காக தண்ணீர் கொண்டு வர வேண்டும். பணிவிடை செய்பவர் இல்லாததால் உமர் (ரலி) அவர்கள் தாங்களே அதை செய்வதற்காக வேண்டி முடிவு செய்து அந்தப் பெண்மணியின் பெயரைக் குறித்து வைத்துக் கொண்டார்கள்.

எனவே உமர் (ரலி) அவர்கள் மறுநாள் ஃபஜ்ருக்கு பிறகு அந்த பெண்மணியின் வீட்டிற்கு சென்று கதவைத் தட்டி அம்மா நான் உங்களுக்கு பணிவிடை செய்வதற்காக வந்துள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு அவ்வயோதிகப் பெண்மணி அவர்கள் என் வேலைகள் முடிந்து விட்டது. வீடு பெருக்கப்பட்டு விட்டது. வெளியிலிருந்து தண்ணீரும் கொண்டு வரப்பட்டு விட்டது. மற்ற வேலைகளை நானே செய்து கொள்கிறேன் என்று கூறினார்.

இதைக் கேட்ட உமர் (ரலி) அவர்கள் அம்மா!!! அந்த வேலை செய்வதற்கு யார் வருகிறார்? என்று கேட்டார்கள். அதற்கு அவ்வயோதிகப் பெண்மணி அவர் யாரென்று அறிய மாட்டேன். ஏனென்றால் அவரை நான் பார்த்ததே இல்லை என்று கூறினார். இதைக் கேட்ட உமர் (ரலி) அவர்கள் அவரின் பெயர் என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவ்வயோதிகப் பெண்மணி அவர் தன் பெயரைக் கூறியதும் இல்லை, அவர் வந்து "பணிவிடை செய்பவர்" வந்துவிட்டார் என்று கூறுவார். நான் திறை மறைவில் சென்று விடுவேன். அவர் இரண்டு வேலைகளையும் முடித்து விட்டு சென்றுவிடுவார். செல்லும் போது பர்தா முடிந்து விட்டது என்று கூறியவராக சென்று விடுவார். நான் பர்தாவிலிருந்து வெளியே வந்து விடுவேன். இத்தனைக் காலமாக இவ்வாறு தான் பணிவிடை செய்து வருகிறார். எனவே அவரை நான் பார்த்ததும் இல்லை, மேலும் அவரது பெயரும் தெரியவில்லை என்று கூறினார். அந்த வயோதிகப் பெண்மணியின் பேச்சைக் கேட்டு உமர் (ரலி) அவர்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்தார்கள். எனவே உமர் (ரலி) அவர்கள் மறுநாள் தஹஜ்ஜத் தொழுதார்கள். பிறகு அந்த வயோதிகப் பெண்மணியின் வீட்டிற்கு வந்து வாசல் கதவை தட்டி அம்மா!!! பணிவிடை செய்பவர் வந்துள்ளார் என்று கூறினார்கள். அதற்கு அந்த வயோதிகப் பெண்மணி பணிவிடை செய்பவர் பணிவிடை செய்து விட்டு சென்று விட்டார் என்று கூறினார். பின்பு உமர் (ரலி) அவர்கள் மறுநாள் இஷா தொழுதுவிட்ட பிறகு பணிவிடை செய்யக்கூடிய அல்லாஹ்வின் அடிமையைப் பார்ப்பதற்காக வேண்டி அந்த வயோதிகப் பெண்மணியின் வீட்டிற்குச் செல்லும் பாதையில் மறைந்து அமர்ந்து கொண்டார்கள். இருள் சூழ்ந்து இன்னும்

மக்களெல்லாம் இனிமையான தூக்கத்தில் ஆழ்ந்து விட்ட நேரத்தில் ஒரு மனிதர் மெல்ல மெல்ல நடந்து அந்த வயோதிகப் பெண்மணியின் வீட்டிற்கு நெருக்கமாக வருவதை உமர் (ரலி) அவர்கள் பார்த்தார்கள். (இருளாக இருந்ததின் காரணமாக அந்த மனிதர் யார் என்று அறியாமல்) உடனே எழுந்து அந்த மனிதரை நோக்கி நீங்கள் யார் என்று கேட்டார்கள். அதற்கு அந்த மனிதர் நான் அபூபக்கர் என்று கூறினார்கள். இதைக் கேட்ட உமர் (ரலி) அவர்கள் ஆச்சரியமடைந்தவர்களாக ஓ! அமீருல் முஃமினீன் இந்த நேரத்தில் தன்னந்தனியாக இங்கு ஏன் வந்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அபூபக்கர் (ரலி) அவர்கள் அந்த வயோதிகப் பெண்மணிக்கு பணிவிடை செய்யும் பொருப்பை நான் ஏற்றுள்ளேன். எனவே அங்கு வந்துள்ளேன் என்று கூறினார்கள். பின்பு உமர் (ரலி) அவர்கள் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் செருப்பு அணியாமல் வந்திருப்பதைக் கண்டார்கள். எனவே அவர்கள் அமீருல் முஃமினீன் அவர்களே! உங்களது செருப்பு எங்கே? என்று கேட்டார்கள். அதற்கு அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் செருப்பின் பாத ஒலி மூலமாக தூங்கக் கூடியவர்களின் தூக்கத்திற்கு இடையூறு அளிக்காமல் இருப்பதற்காக வேண்டி வீட்டிலேயே காலணிகளை விட்டு விட்டேன் என்று கூறினார்கள். சுப்ஹானல்லாஹ்! இவர்கள் எத்தகைய நபர்கள் என்றால் நபி (ஸல்) அவர்களின் புனித நாவின் மூலம் சொர்க்கத்தின் சுபச் செய்தி பெற்றவர்கள் இவ்வளவு இருந்தும் அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக வேண்டி தனது நல் அமல்களை மறைத்தே செய்து வந்தார்கள். இன்று நாம் இந்த அளவுகோலை முன் வைத்து நமது அமல்களைப் பார்ப்போமேயானால் நமது செயலேடு காலியாகவே தெரியும்!.

# மனத்தூய்மையை பரிசோதனை செய்தல்

இந்த மனத்தூய்மையை பரிசோதனை செய்வதற்காக வேண்டி அல்லாஹ் பல பரிசோதனை சாவடிகளை (செக்போஸ்ட்) ஏற்படுத்தியுள்ளான். உலகில் ஒரு மனிதன் தன் வாகனத்திலே செல்லும் சமயம் சோதனை செய்யும் இடத்தில் அதனை கண்காணிப்பவர் அவரை நிறுத்தி அவரையும் அவரது வாகனத்தையும் சோதித்து விட்டு அனுப்புகிறார். அந்த மனிதர் மற்றொரு சோதனை செய்யும் இடத்திற்கு வரும் போது அங்கேயும் அவர் சோதிக்கப்படுகிறார். இவ்வாறே அவர் கடந்து செல்லும் இடங்களில் அனைத்திலும் அவர் சோதிக்கப்படுகிறார். அவ்வாறே அல்லாஹ்வும் அடியானின் மனத்தூய்மையை சோதிப்பதற்காக ஏழு சோதனை இடங்களை ஏற்படுத்தியுள்ளான். ரிவாயத்தில் வந்துள்ளது. ஒரு அடியான் நல் அமல் புரிந்தால் அதை ஒரு மலக்கு வானத்திற்கு கொண்டு செல்கிறார். ஆனால் முதல் வானத்தின் கதவு பூட்டப்பட்டிருக்கும். கதவை தட்டுவார். அங்கே முதல் வானத்தில் நியமிக்கப்பட்ட வானவர் இந்த வானவரிடம் நீங்கள் யார்? ஏன் மேலே செல்ல நாடுகிறீர்கள்? என்று கேட்பார். அதற்கு அந்த வானவர் ஒரு அடியான் நல் அமல் புரிந்துள்ளார். அதை அல்லாஹ்விடத்தில் கொண்டு செல்ல நாடுகிறேன் என்று கூறுவார். அதற்கு நியமிக்கப்பட்ட வானவர் எனக்கு அந்த அமலை காட்டுங்கள் என்று கூறுவார். அந்த அமல் அல்லாஹ்விற்காக செய்யப்பட்டதா? அல்லது வேறேதும் படைப்புக்காக செய்யப்பட்டதா? என்று பார்ப்பார். அது அல்லாஹ்விற்காக செய்யப்பட்டிருந்தால் அதை

எடுத்துக் கொண்டு மேலே செல்வார். அல்லாஹ்விற்காக செய்யப்படவில்லை என்றால் உலகிற்கே திருப்பி அனுப்பி விடுவார். இவ்வாறே இரண்டாவது வானத்திலும் ஒரு மலக்கு அந்த அமலை சோதனை செய்கிறார். இதே போன்று மூன்றாவது வானம், நான்காவது வானம் என்பதாக ஏழு வானத்திலும் மனத்தூய்மையை சோதிக்கப்படுகின்றது. இறுதியாக எப்பொழுது அல்லாஹ்விடம் அந்த அமலை சமர்ப்பிக்கப்படுமோ அல்லாஹ்வும் அதனை சோதனை செய்கின்றான். அது அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக செய்யப்பட்டிருந்தால் அதை ஏற்றுக் கொள்கிறான். வேறு எவருக்கேனும் செய்யப்பட்டிருந்தால் அந்த அமலை அந்த அடியானின் முகத்திலேயே எறிந்து விடுகிறான்.

இதனாலேயே நல்லோர்கள் கூறினார்கள்:

الناس كلهم هالكون الا العالمون

மக்கள் அனைவரும் நாசமாகக்கூடியவர்கள் கல்விமான்களைத் தவிர

والعالمون كلهم هالكون الا العاملون

கல்விமான்கள் அனைவரும் நாசமாகக் கூடியவர்கள் அமல் செய்யக்கூடியவர்களைத் தவிர

والعاملون كلهم هالكون الا المخلصون

அமல் செய்யக்கூடியவர்கள் அனைவரும் நாசமாகக்கூடியவர்கள் மனத்தூய்மை உடையவர்களைத் தவிர.

## والمخلصون على خطر عظيم

மனத்தூய்மையான அடியார்கள் மிகப் பெரிய ஆபத்தில் உள்ளார்கள்.

இப்பொழுது நாம் மனத்தூய்மையின் விஷயத்தில் எவ்வாறு கவலைப்பட வேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள்! இன்று உலகத்தில் உள்ள கம்பெனிகளில் தரத்தை சோதிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர், "வாடிக்கையாளர் என்னிடம் தரமான பொருளை கேட்கிறார். இதன் காரணமாக என்னுடைய அனைத்து பொருளும் தரமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஒரு பொருள் தரம் குறைவாக இருந்தால் அதன் காரணமாக நிராகரிக்கப்படுகின்றது. முற்றிலும் அதே போன்று தான் அல்லாஹ்வும் அமல்களின் தராதரங்களை சோதனை செய்யும் குழுவை அமைத்துள்ளான். இன்னும் ஒவ்வொரு அமலிலும் மனத்தூய்மையை (இக்லாஸ்) யை சோதிக்கப்படுகின்றது. எந்த அமல் எந்த அளவுகளில் முழுமையாக இருக்குமோ அதனை முழுமையாக ஏற்றுக் கொள்கின்றான். இன்னும் எந்த அமல் அதன் அளவில் குறையுள்ளதாக இருக்குமோ அல்லாஹ் அதனை நிராகரித்து விடுகின்றான். நான்கு பைசா ஒரு பொருளுக்கு பகரமாக தருகின்ற ஒரு வாடிக்கையாளரே பொருளில் தரமானதை கேட்கிறார் என்றால், தன்னுடைய சுவனங்களைக் கொடுப்பதற்காக தன்னுடைய பொருத்தத்தைக் கொடுப்பதற்காக இன்னும் தன்னுடைய சந்திப்பை வழங்குவதற்காக அடியானின் அமல்களில் மனத்தூய்மையை இறைவன் எவ்வாறு கேட்காமல் இருப்பான். இதன் காரணமாக நாம் நம்மிடம் (இக்லாஸ்) வருவதற்காக கவலைப்பட வேண்டும்.

யா அல்லாஹ்! என்னுடைய ஒவ்வொரு அமலையும் உன்னுடைய பொருத்தத்திற்காக ஆக்குவாயாக! இன்னும் என்னுடைய பார்வையை படைப்பினங்களிலிருந்தும் அகற்றி விடு என்ற ஒரே கவலை கொள்ளுங்கள்.

## மனத்தூய்மையானவர் யார்?

ஒரு தடவை ஃபகீஹ் அபுல் லைஸ் சமர்கந்தீ (ரஹ்) அவர்களிடம் ஒருவர் கேட்டார். ஹள்ரத் மனத்தூய்மையானவர் என்று யாருக்கு சொல்லப்படும்? அதற்கு அவர்கள் கூறினார்கள். நீ ஆடு மேய்க்கக்கூடியவனை பார்த்துள்ளாயா? அவர் ஆம் என்றார். உடனே ஹள்ரத் சொன்னார்கள். அந்த ஆடு மேய்ப்பவன் ஆடுகளுக்கு நடுவில் தொழுகைக்காக அமர்ந்தால் அந்த ஆடுகளெல்லலாம் என்னை புகழ்கிறது என்ற ஆசை அவனது உள்ளத்தில் ஏற்படுமா? அந்த மனிதர் சொன்னார் இல்லை. அவனுக்கோ இந்த ஆடுகளெல்லாம் என்னை புகழும் என்ற ஆசை கொஞ்சமும் ஏற்படாது.

ஹள்ரத் சொன்னார்கள்: எவ்வாறு அந்த ஆடு மேய்க்கக்கூடியவன் ஆடுகளுக்கு மத்தியில் அமர்ந்து தொழுகின்றானோ இன்னும் எள்ளளவும் அவனது உள்ளத்தில் ஆடுகளெல்லாம் நம்மை புகழும் என்ற ஆதரவு ஏற்படாதோ அதே போன்று ஒரு மனத்தூய்மையான அடியான் மக்களுக்கு மத்தியில் அமர்ந்து அல்லாஹ்வை துதிக்கும் சமயம் இந்த மக்கள் என்னை புகழ்வார்கள் என்ற எந்தவொரு ஆசையும் ஏற்படாது.

அல்லாஹ் நமக்கு இப்படிப்பட்ட மனத்தூய்மையை தந்தருள் புரிவானாக! ஆமீன்!!!

# அல்லாஹ்வின் தர்பாரும் இன்னும் அல்லாஹ்வின் பயமும்

இரண்டு வார்த்தைகள் ஞாபகம் இருக்கட்டும்.

ஒன்று "அல்லாஹ் கா தர்" (அல்லாஹ்வின் தர்பார்) மற்றொன்று "அல்லாஹ் கா டர்" (அல்லாஹ்வின் பயம்). இந்த இரு விஷயங்களையும் வாழ்க்கை முழுவதும் விட்டு விடக்கூடாது. அல்லாஹ்வின் தர் (பாரையும்) விட்டுவிடக் கூடாது. ஒருபொழுதும் பயமில்லாமல் இருப்பது கூடாது, ஒருபோதும் நான் அதிகமாக தஹஜ்ஜத் தொழுகிறேன். அதிகமாக திக்ரில் ஈடுபடுகின்றேன். நான் அதிக தடவை லா இலாஹ இல்லல்லாஹ் வை சொல்லுகின்றேன் என்று பெருமிதப்படவே கூடாது. முழு வாழ்க்கையிலும் மனதில் பயம் இருக்க வேண்டும். கியாமத் நாளில் நான் என்ன ஆவேன் என்று தெரியாதே என்ற பயம் இருக்க வேண்டும்.

முழு வாழ்க்கையிலும் இந்த இரு அருட் பாக்கியங்களும் சேர்ந்து இருந்தால் நாம் பாதுகாக்கப்பட்டு அல்லாஹ்வின் பாதைகளின் மீது கால் எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

### ஒவ்வொரு அமலுக்கும் பகரம் உண்டு

உள்ளத்தில் மக்கள் என்னை நல்லவன் என்று சொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருந்து மக்களும் என்னை நல்லவன் என்று சொல்லி விட்டால் அதுபோல் மக்கள் என்னை புகழ வேண்டும் என்ற எண்ணம் இருந்து மக்களும் புகழ்ந்தால் அமலின் பகரம் கிடைத்துவிட்டது என்று பொருள். மறுமை நாளில் ஒரு ஆலிமை

முன் கொண்டுவரப்பட்டு அவரிடம் என்ன கொண்டு வந்துள்ளாய் என்று கேட்கப்படும். அவர் யா அல்லாஹ்! நான் பெரிய பள்ளிவாசல்களை கட்டினேன். பெரிய மத்ரஸாக்களை கட்டினேன். இன்னும் மார்க்கப்பணியை செய்தேன் என்பார். அதற்கு அல்லாஹ் கூறுவான். நீ இதையெல்லாம் மக்கள் உன்னை பெரிய ஆலிம் என்று கூறவேண்டும் என்பதற்காக செய்தாய் அது சொல்லப்பட்டுவிட்டது. இப்பொழுது நம்மிடத்தில் உனக்காக எதுவுமில்லை. எனவே அந்த அடியானை முகம் குப்புற இழுத்துக் கொண்டு போய் நரகத்தில் நுழைவியுங்கள் என்று மலக்குமார்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்படும்.

என்னுடைய தோழர்களே! இப்பொழுது சிந்திக்க வேண்டிய விஷயம் இதுவாகும்.

நாம் இவ்வளவு செய்கின்றோமே என்ன இவை அனைத்தையும் ஒரு அடியானின் புகழுக்காக செய்கின்றோமா என்று நினைத்துப் பாருங்கள். இதற்காக செய்திருந்தால் நாம் அழிவதில் எந்த ஒரு சந்தேகமுமில்லை. சில அடியார்கள் பெரிய, பெரிய அமல்களையெல்லாம் கொண்டு வருவார்கள். ஆனால் அதனுடைய பகரம் உலகத்திலே அவர்களுக்கு கொடுக்கப்பட்டு விட்டது என்று சொல்லப்படும். இத்தகைய அடியார்கள் எவ்வளவு பெரிய நஷ்டம் அடைவார்கள்? மக்கள் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் கியாமத் நாளில் என்ன ஆகும் என்று அவர்களுக்குத் தெரியாது.

நாம் அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக வேண்டி இந்த அமல்களையெல்லாம் சேமித்து வைக்கவில்லை என்றால் அனைத்தும் மறுமை நாளில் நமக்கு பெரிய சிரமமாக ஆகிவிடும்.

**"நான் உன்னை ஹாஜி என்கிறேன்" "நீ என்னை காழி என்று கூறு!"**

ஒரு உண்மை விஷயத்தை நான் முன் வைக்கின்றேன். எப்பொழுது நான் முன்னோர்களின் மனத்தூய்மையின் இந்த அளவைப் பார்த்தேனோ அப்போது என் மனதில் நான் பீர் ஆக இருப்பதற்கோ நீங்கள் எனக்கு முரீதாக இருப்பதற்கோ நான் தகுதியானவன் இல்லை என்று என் மனம் சொல்லிவிட்டது. நம்முடைய நிலை, எப்படியாகி விட்டதெனில் எல்லாவிதமான கேவலத்திற்கும் உள்ளானோர் ஒருவருக்கொருவர் "நான் உன்னை ஹாஜி என்கிறேன்" "நீ என்னை காழி என்று கூறு" எனக் கூறிக் கொண்டது போல் ஆகிவிட்டது.

من ترا حاجی بگویم تو مرا قاضی بگو

உங்களை நான் சாதகன் என்று சொல்கிறேன். நீங்கள் என்னை பீர் என்று கூறுகிறீர்கள். ஆனால் அல்லாஹ் நம்மை என்ன ஆக்குவான் என்று தெரியாது. இன்னும் காலமிருக்கிறது நாம் நம்முடைய அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடலாம்.

யா அல்லாஹ்! நாங்கள் ஏதாவது அமலை முகஸ்துதிக்காக வேண்டி செய்திருந்தால் உன்னிடம் நாங்கள் பாவமன்னிப்பை தேடுகிறோம். எங்கள் அதிபதியே! நாங்கள் உன்னை திருப்தி படுத்தவே அனைத்தையும் செய்ய நாடுகிறோம். மறுமை நாளின் ஏழ்மையிலிருந்து பாதுகாப்பாயாக! மறுமை நாளின் ஏழ்மையிலிருந்தும் மறுமை நாளின் நஷ்டத்திலிருந்தும் பாதுகாப்பாயாக!

அல்லாஹுதஆலா நம்மை (இக்லாஸ் என்னும்) மனத்தூய்மை யுடன் அனைத்து அமல்களையும் செய்யக்கூடிய பாக்கியத்தை தந்தருள் புரிவானாக!

ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!!!

அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதிலே மனிதனுடைய எண்ணம் மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. எனவே தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

انما الاعمال بالنيات

"அமல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே அமைந்துள்ளது".

எண்ணத்தை மாற்றுவதின் மூலம் மனிதனுடைய அமலின் எதார்த்த நிலை மாறி விடுகின்றது இதனால் தான் நாம் நம்முடைய எண்ணங்களை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்! அதன் மீது சிந்தனை வைத்துக் கொண்டே இருக்க வேண்டும்! அதனை சரி செய்து கொண்டே இருக்க வேண்டும்! ஏனென்றால் எண்ணம் சீராகுவதன் மூலம் சிறிய சிறிய அமல்களுக்கும் மிகப்பெரும் கூலி கிடைக்கின்றது. மேலும் எண்ணத்தில் மாற்றம் எற்படுவதின் மூலம் மலைகள் போன்ற அமல்களுக்கும் கூட சிறிதும் நன்மை கிடைக்காமல் போய் விடுகின்றது.